# போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2019–2020

## மானியக் கோரிக்கை எண். 48


**எம்.ஆர். விஜயபாஸ்கர்**

**போக்குவரத்துத் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2019

# பொருளடக்கம்

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒரு பார்வை | 6 |
| 3 | சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் | 22 |
| 4 | பொதுமக்களுக்கான சேவைகளை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் | 31 |
| 5 | பயணக் கட்டணச் சலுகை | 38 |
| 6 | வருவாய் மேம்பாட்டு நடவடிக்கைகள் | 46 |
| 7 | பணியாளர்களின் நலன்களுக்கான நடவடிக்கைகள் | 49 |
| 8 | ஓட்டுநர்களின் செயல்திறனை மேம்படுத்துதல் | 56 |
| 9 | அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் | 58 |
| 10 | தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை | 83 |
| 11 | பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு, சென்னை | 90 |
| 12 | சாலை போக்குவரத்து நிறுவனம், சென்னை | 92 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 13 | சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவு | 101 |
| 14 | பயிற்சி | 104 |
| 15 | தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, சென்னை | 111 |
| 16 | துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு விமானம் மற்றும் இரயில் போக்குவரத்து | 116 |
| 17 | வருங்கால முயற்சிகள் | 128 |
| 18 | முடிவுரை | 132 |

## போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2019 – 2020

## அத்தியாயம்–1

## முன்னுரை

**1.** நாட்டில் திறமையான பொது போக்குவரத்தை வழங்குவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. பொதுமக்கள் பயணம் செய்ய உதவுவதோடு மட்டுமல்லாமல் பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கு வகிப்பதில் போக்குவரத்து வசதிகள் முக்கிய காரணியாக உள்ளது. போக்குவரத்தானது அனைத்து வகையான போக்குவரத்தினையும் உள்ளடக்கியுள்ளது. போக்குவரத்துத் துறையானது கிடைக்கக்கூடியதிலிருந்து அணுகக்கூடிய (availability to accessibility) மற்றும் பொதுமக்களின் திருப்தி என்ற நிலைக்கு மாறிவரும் சூழ்நிலையில் அரசு, போக்குவரத்தில் உள்ள சவால்களை முழுமையாகவும் சிறப்பாகவும் எதிர்கொண்டு வருகிறது. போக்குவரத்தென்பது பயணிகள்

மற்றும் சரக்கு போக்குவரத்து, சாலை, இரயில், வான்வழி போக்குவரத்து, தனியார், அரசு சார்ந்த மற்றும் அரசு பேருந்து வசதிகள் போன்றவற்றினை உள்ளடக்கியுள்ளது. கீழ்க்கண்ட நோக்கங்களுக்கு மாநிலத்திலுள்ள போக்குவரத்துத்துறையின் கவனம் உள்ளது.

i) பேருந்து இயக்க வழியிலான பொது போக்குவரத்து.

ii) இரயில், விமான போக்குவரத்துக்கு தேவையான நிலம் கையகப்படுத்துவதற்கு சம்மந்தப்பட்ட துறைகளின் ஒருங்கிணைப்புடன் செயல்படுவது.

iii) மின்சாரப் பேருந்துகளை ஊக்குவிப்பதற்கு சுற்றுச்சூழலுக்கு உதவிடும் வகையில் ஒரு நிலையான இயக்கக் கொள்கைக்கான புதிய முயற்சிகளை மேற்கொள்வது.

## 1.2 போக்குவரத்துத் துறையின் நிர்வாக அமைப்பு:

போக்குவரத்துத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் அமைப்புகள் செயல்படுகின்றன. அவை அரசு முதன்மைச் செயலாளரின் தலைமையின் கீழ் 2 துணைச் செயலாளர்கள், 4 சார்புச் செயலாளர்கள் உட்பட 76 நிர்வாகப் பணியாளர்களுடன், போக்குவரத்துக் கழக தலைவர் அலுவலகத்திலுள்ள 2 அலுவலர்கள் மற்றும்

6 பணியாளர்களைக் கொண்டு போக்குவரத்துத்துறை செயல்பட்டு வருகிறது.

i. ஏழு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள். (இரு போக்குவரத்துக் கழகங்களை இணைப்பதற்கான ஆணை கடந்த நிதியாண்டில் (2018–2019) வெளியிடப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன).

ii. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்.

iii. சாலைப் போக்குவரத்து நிறுவனம்.

iv. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு.

v. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை.

vi. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதியம்.

தமிழகத்தில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏழு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் உள் மற்றும் வெளி மாநிலங்களுக்கான போக்குவரத்துச் சேவைகளை வழங்கி வருகின்றன:

i. மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது, சென்னை.

ii. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது, சென்னை.

iii. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது, விழுப்புரம்.

iv. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது, சேலம்.

v. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) வரையறுக்கப்பட்டது, கோயம்புத்தூர்.

vi. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) வரையறுக்கப்பட்டது, கும்பகோணம்.

vii. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) வரையறுக்கப்பட்டது, மதுரை. (தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) வரையறுக்கப்பட்டது, திருநெல்வேலி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) வரையறுக்கப்பட்டது, மதுரையுடன் இணைக்க ஆணை வெளியிடப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.)

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அலுவல் வழித் தலைவராகவும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராகவும், போக்குவரத்துத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் செயல்படுகிறார்.

# அத்தியாயம்–2

## அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒரு பார்வை

**2.1 பின்னோக்கி பார்த்தல்:** ஒரு அமைப்பு உருவான பின்னணி அதன் தற்போதைய உண்மையான நிலை, எதிர்காலம் குறித்து நன்னம்பிக்கையுடைய கண்ணோட்டம் மற்றும் தொலை நோக்குப் பார்வையுடன் கூடிய திட்டமிடல் போன்றவை அந்த அமைப்பு சரியான பாதையை நோக்கி நகர்வதற்கு உதவுகின்றது. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் போக்குவரத்துத் துறையின் தூணாக செயல்பட்டு, நகர் பேருந்து, புறநகர் பேருந்து, விரைவு மற்றும் மலைப் பகுதிகளுக்கான பல்வேறு விதமான போக்குவரத்து சேவைகளை வழங்கி வருகின்றன. திறமையான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து இயக்கத்தினை நோக்கமாகக் கொண்டு மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் செயல்படுகின்றன. ஏற்கனவே முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளது போல் போக்குவரத்துத் துறையானது மத்திய அரசு துறைகளான தென்னக இரயில்வே மற்றும் வான்வழிப் போக்குவரத்து துறைகளால் தமிழ்நாட்டில் செயல்படுத்தும்

திட்டங்களுக்கு ஒருங்கிணைக்கும் துறையாக செயல்படுகிறது.

**2.2 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக வரலாறு:**

இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஆங்கிலேயர் தலைமையிலான மத்திய அரசு, நாட்டிலுள்ள பொது போக்குவரத்து நிலை குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க, 1944–ஆம் ஆண்டு ஒரு குழுவை நியமித்ததாக அறியப்படுகிறது. அக்குழு இந்தியா முழுவதும் போக்குவரத்து அமைப்பு குறித்து ஆய்வு செய்து, போக்குவரத்துப் பிரிவில் பெரும்பாலும் தனியார்களால் இயக்கப்படும் பேருந்துகள் இலாப நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதாகவும், பொதுமக்களின் நலனை மறந்து செயல்படுவதாகக் கண்டறிந்து நாட்டின் நலன் கருதி போக்குவரத்துத் துறையை தேசியமயமாக்க வேண்டும் என்ற பரிந்துரையுடன் தனது அறிக்கையை 1946–ஆம் ஆண்டு சமர்ப்பித்தது. அப்போதைய மத்திய அரசும் இக்குழுவின் பரிந்துரையை ஏற்று, போக்குவரத்து பிரிவை தேசியமயமாக்க வேண்டும் என்று அனைத்து மாநிலங்களுக்கும் ஆணையிட்டதாக தெரிகிறது. அதனடிப்படையில், அப்போதைய சென்னை மாகாணம் 24.03.1947 அன்று மாநில

தலைநகர் சென்னையில் இயக்கப்படும் **239** தனியார் பேருந்துகளை தேசியமயமாக்க ஆணை வழங்கியது. அவ்வரசாணையின் அடிப்படையில் சென்னையில் இயக்கப்பட்ட அனைத்து பேருந்துகளும் படிப்படியாக ஜுலை **1948**–க்கு முன்னதாக தேசியமயமாக்கப்பட்டு அரசு பேருந்து சேவை என பெயரிடப்பட்டு இயக்கப்பட்டது. மாநிலங்களின் சீரமைப்பிற்குப் பின்னர் அரசுப் பேருந்து சேவை என்ற பெயர் மாநில போக்குவரத்துத்துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சென்னை, அரசு போக்குவரத்துத் துறையுடன் கன்னியாகுமரி மாவட்டம் **01.11.1956** அன்று இணைக்கப்பட்டது. சென்னை மற்றும் கன்னியாகுமரியில் இயங்கி வந்த அரசு போக்குவரத்துத் துறையானது கர்நாடக மாநிலத்துடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் மூலம் சென்னை–கர்நாடகாவிற்கு இடையிலான முதல் விரைவுப் போக்குவரத்து சேவை **1959**–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடங்கப்பட்டது. அந்த சேவையின் சிறந்த வெற்றியினால் சென்னை மாநிலத்திலுள்ள மக்களிடமிருந்து இதே போன்ற விரைவுப் போக்குவரத்து சேவையினை மாநிலத்திற்குள்ளேயும் இயக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதன் காரணமாக சென்னையிலிருந்து 120 கி.மீ–க்கு அப்பால் உள்ள

இடங்களை இணைக்கும் வகையில் விரைவு போக்குவரத்து சேவை துவங்கப்பட்டது. அந்த முயற்சியின் வாயிலாக அனைத்து பகுதிகளுக்கும் அரசால் போக்குவரத்து சேவை வழங்க முடிந்தது.

**2.3** தொடர்ச்சியாக, மாநிலப் போக்குவரத்துத்துறை சிறப்பாக செயல்படுவதற்காக சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி என நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, நான்கு மண்டலங்களிலும் சிறப்பாக செயல்படுவதற்கு சென்னையிலுள்ள இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் நான்கு இணை இயக்குநர்கள் நியமிக்கப்பட்டனர். தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துத் துறையின் திறமையை ஆராய்வதற்காக மாநில அரசால் ஒரு உயர்மட்ட குழு 1968–ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. போக்குவரத்து சேவையை அரசின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் வழங்காமல் வரையறுக்கப்பட்ட கழகம் என்ற புதிய வடிவம் பெறவேண்டும் என்று அக்குழு பரிந்துரை செய்தது. இப்புதிய முயற்சியின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்து பிரிவு, பொருளாதாரம் மற்றும் சேவை நோக்கங்களுடன் திறமையாக செயல்படும் என்று பரிந்துரைக்கப்பட்டது. இப்பரிந்துரையின் அடிப்படையில், சென்னை மற்றும் செங்கல்பட்டில்

இயக்கப்பட்டு வந்த தமிழ்நாடு மாநில போக்குவரத்து பேருந்துகள் மற்றும் நிர்வாகம் **1956**–ஆம் வருடத்திய கம்பெனிகளின் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்று பெயரிடப்பட்டது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினை உருவாக்கியது இதர போக்குவரத்துக் கழகங்கள் உருவாக வழிவகுத்தது.

**2.4 மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள்:** மாநிலப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் **31.03.2019** அன்றுள்ளவாறு **2,053** உபரி பேருந்துகள் உட்பட **21,542** பேருந்துகள் இயக்கப்படுகின்றன. **31.03.2019** அன்று வரையில் வரையறுக்கப்பட்ட பேருந்து சேவைகளின் எண்ணிக்கை **19,489** ஆகும். மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் இயக்க எல்லை அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரபிரதேசம், கேரளா மற்றும் மத்திய ஆட்சிப் பகுதியான புதுச்சேரி வரை பரவியுள்ளது. அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் நாளொன்றுக்கு சராசரியாக **85.23** இலட்சம் கி.மீ. தூரத்திற்கு பேருந்துகளை இயக்குகின்றன. **31.03.2019** அன்றுள்ளவாறு, பதிலி பணியாளர்களையும் சேர்த்து மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை **1,31,298** ஆகும். அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டுத் திறனை

மேம்படுத்த, அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால், செயல்பாட்டுத் திறன் குறியீடுகள் சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளன. மார்ச் 2011–ல், ஒரு லிட்டருக்கு 5.25 கிலோ மீட்டராக இருந்த எரிபொருள் இயக்கத்திறன், மார்ச் 2019–ல், ஒரு லிட்டருக்கு 5.33 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஒன்றுக்கு ஓடிய தூரம் மார்ச் 2011–இல் 1.65 லட்சம் கிலோ மீட்டராக இருந்த அளவுகோல், மார்ச் 2019–இல் 2.37 லட்சம் கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது.

### 2.5 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அலகுகள்:

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பின்வரும் அலகுகளைக் கொண்டுள்ளன.

| பணிமனைகள் (கிராமம் மற்றும் நகர்ப்புறம்) | இயந்திர மறுசீரமைப்பு பிரிவு மற்றும் தொழிற் கூடங்கள் | பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் | உருளிப்பட்டை (Tyre) புதுப்பிக்கும் தொழிற்கூடங்கள் | பேருந்து தரச்சான்று அளிக்கும் பிரிவுகள் |
|---|---|---|---|---|
| 322 | 20 | 23 | 18 | 51 |

**2.6** 2011–ஆம் ஆண்டுக்குப் பிறகு கடந்த எட்டு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு பேருந்துக் கட்டணத்தை ஒரு முறை மட்டுமே உயர்த்தியுள்ளது. பிற மாநிலங்களில் தற்போது நடைமுறையிலுள்ள பேருந்துக் கட்டண ஒப்பு நோக்கு அட்டவணை பின்வருமாறு:

**2011–இல் உள்ள பேருந்து கட்டணம்:**

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | விரைவு / சொகுசு | அதி சொகுசு | அதி நவீன சொகுசு | குளிர் சாதனம் |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 18.11.2011 | 42 | 56 | 60 | 70 | 90 |
| ஆந்திர பிரதேசம் | 16.07.2011 | 50 | 62 | 82 | 82 | 140 |
| கேரளா | 08.03.2010 | 55 | 57 | 65 | 90 | 90 |
| கர்நாடகம் | 26.06.2011 | 46.44 | 68.71 | 83 | 105.16 | 137.72 |

## 2019–இல் உள்ள பேருந்து கட்டணம்:

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | விரைவு / சொகுசு | அதி சொகுசு | அதி நவீன சொகுசு | குளிர் சாதனம் | வால்வோ |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 29.01.2018• | 58 | 75 | 85 | 100 | 130 | 170 |
| ஆந்திர பிரதேசம் | 24.10.2015 | 63.70 | 87 | 98 | 116 | 146 | 182 |
| கேரளா | 01.03.2018 | 75 | 78 | 85 | 100 | 120 | 145 |
| கர்நாடகம் | 10.01.2015 | 59 | 90 | 112 | 131 | 177 | 190 |

• **20.01.2018** அன்று மாற்றியமைக்கப்பட்ட கட்டணத்தில் **29.01.2018** அன்று சிறு மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

**2.7 அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துச் சேவைகள்:** 31.03.2019 அன்றுள்ளவாறு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் பயணிகளின் நலனுக்காக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையின் விவரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| சென்னை மாநகர் – நகரப் பேருந்துகள் | 3,439 |
| நகர் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 6,64 |
| புறநகர் பேருந்துகள் | 7,825 |
| மலைப்பகுதி பேருந்துகள் | 497 |

| **விரைவுப் பேருந்துகள்** | |
|---|---|
| மாநிலத்திற்குள் | 632 |
| வெளிமாநிலங்களுக்கு | 450 |
| மொத்த இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை | 19,489 |
| மொத்த இயக்கப் பேருந்துகளுக்கான உபரிப் பேருந்துகள் | 2,053 |
| **மொத்தப் பேருந்துகள்** | **21,542** |

**2.8** 2011–12 முதல் 2018–19 வரையிலான ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கச் செயல்பாட்டு திறன் குறியீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:

| பொருள் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 |
|---|---|---|---|---|---|---|---|---|
| பேருந்துகளின் எண்ணிக்கை | 21,207 | 22,053 | 22,501 | 22,474 | 23,078 | 22,533 | 21,744 | 21,542 |
| இயக்கப்படும் பேருந்துகள் | 19,507 | 20,500 | 20,684 | 20,684 | 20,839 | 20,776 | 19,490 | 19,489 |
| ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ) | 88.44 | 89.78 | 91.20 | 90.21 | 94.02 | 92.55 | 87.22 | 85.23 |
| பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.01 | 0.01 | 0.01 | 0.004 | 0.004 | 0.004 | 0.003 | 0.002 |
| விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | 0.22 | 0.20 | 0.20 | 0.18 | 0.18 | 0.16 | 0.15 | 0.14 |
| உயிரிழப்பு விபத்துகள் | 1,237 | 1,233 | 1,187 | 1,165 | 1,258 | 1,209 | 1,085 | 1,033 |

| பொருள் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 | 2018–19 |
|---|---|---|---|---|---|---|---|---|
| விபத்துகளில் இறந்தவர்களின் எண்ணிக்கை | 1,397 | 1,382 | 1,318 | 1,331 | 1,460 | 1,373 | 1,247 | 1,159 |
| எரிபொருள் செயல் திறன் (கிமீ/லிட்டருக்கு) சராசரியாக | 5.25 | 5.27 | 5.26 | 5.30 | 5.29 | 5.33 | 5.33 | 5.33 |
| கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கிலோ மீட்டர்) | 1.65 | 1.80 | 1.82 | 1.92 | 2.01 | 2.08 | 2.22 | 2.37 |
| இயக்க வேண்டிய ஒரு பேருந்துக்குப் பணியாளர்கள் விகிதம் (தொழிற்கூடப் பணியாளர்கள் உட்பட) | 6.40 | 6.31 | 6.43 | 6.48 | 6.52 | 6.51 | 6.82 | 6.53 |

**2.9 இயக்கச் செலவு:** 2018–2019–ஆம் ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் விவரம் சதவீதத்தில் பின்வருமாறு:

| வ. எண். | இயக்கச் செலவு வகைகள் | சதவீதத்தில் |
|---|---|---|
| 1 | சம்பளம் | 53.58 |
| 2 | டீசல் | 29.32 |
| 3 | பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு | 2.76 |
| 4 | தேய்மானம் | 1.58 |

| | | |
|---|---|---|
| 5 | வட்டி | **8.45** |
| 6 | வரிகள் | **1.45** |
| 7 | மற்றவை (மின்கட்டணம், எழுதுபொருள் இதர) | **2.86** |
| **மொத்தம்** | | **100.00** |

**2.10 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய்:** டீசல் விலை அடிக்கடி உயர்ந்து வருவதாலும், உதிரி பாகங்களின் விலை உயர்வாலும், ஊதிய ஒப்பந்தத்தாலும் மற்றும் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு வழங்குவதாலும் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் செலவினங்கள் ஏற்படுகின்றன. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பிரதான தலைப்பின்கீழ் கடந்த ஏழு ஆண்டுகளில் ஈட்டிய மொத்த வருவாய் விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில் / நாள் ஒன்றுக்கு)

| **ஆண்டு** | **நாளொன்றுக்குப் பேருந்துக் கட்டண வசூல்** | **இதர வருவாய்** | **மொத்த வருவாய்** |
|---|---|---|---|
| 2012–2013 | 19.87 | 3.01 | 22.88 |
| 2013–2014 | 20.12 | 4.59 | 24.71 |
| 2014–2015 | 20.50 | 4.41 | 24.91 |

| ஆண்டு | நாளொன்றுக்குப் பேருந்துக் கட்டண வசூல் | இதர வருவாய் | மொத்த வருவாய் |
|---|---|---|---|
| 2015–2016 | 20.76 | 2.77 | 23.53 |
| 2016–2017 | 20.76 | 4.91 | 25.67 |
| 2017–2018 | 21.41 | 5.27 | 26.68 |
| 2018–2019 (தணிக்கைக்கு முன்) | 24.19 | 4.91 | 29.10 |

**2.11 அரசு வழங்கிய நிதியுதவி விவரங்கள்:** அரசு கடந்த எட்டு ஆண்டுகளில் (2011–2019), பங்கு மூலதன உதவி (Share Capital Assistance), கடன் (Loan), வழிவகை முன்பணம் (Ways & Means Advance), உதவித்தொகை (Grant), மாணவர் கட்டணச் சலுகையை ஈடு செய்தல் (Reimbursement of Student Concession) ஆகிய வகைகளில் ரூ.15,040.09 கோடிகளை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கியுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

## i. பங்கு மூலதன உதவி:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | புதிய பேருந்துகள் | மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் | புத்தகக் கணக்குகளில் நிலுவைத் தொகையைக் குறைக்க நடைமுறை மூலதனமாக / மூலதனச் செலவினத்தைச் சரிசெய்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2011–12 | 155.26 | 7.03 | – | 162.29 |
| 2012–13 | 150.00 | 24.63 | – | 174.63 |
| 2013–14 | – | – | 350.00 | 350.00 |
| 2014–15 | 125.00 | – | 228.00 | 353.00 |
| 2015–16 | – | – | 150.00 | 150.00 |
| 2016–17 | 150.00 | – | – | 150.00 |
| 2017–18 | – | – | – | – |
| 2018–19 | 712.54 | – | – | 712.54 |
| **மொத்தம்** | **1292.80** | **31.66** | **728.00** | **2052.46** |

அண்மையில், நிலுவையில் உள்ள வழிவகை முன்பணம் மற்றும் அதன் வட்டி ரூ.**3001.47** கோடியினை மூலதனப் பங்காக அரசால் மாற்றப்பட்டுள்ளது.

## ii. கடன்கள் மற்றும் வழிவகை முன்பணங்கள்:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | புதிய பேருந்துகள் | பேருந்து–களைப் புதுப்பித்தல் | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | ஊதிய ஒப்பந்தம் / ஊக்கத் தொகை/ அகவிலைப்–படி நிலுவை | ஓய்வு பெற்றவர்–களின் பணப்பலன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2011–12 | 137.50 | 24.40 | 25.00 | 81.03 | 178.14 | – | 446.07 |
| 2012–13 | – | – | 13.91 | – | – | – | 13.91 |
| 2013–14 | – | 24.40 | – | – | – | – | 24.40 |
| 2014–15 | 81.61 | – | 39.73 | – | – | – | 121.34 |
| 2015–16 | 125.00 | – | – | – | 360.00 | 116.00 | 601.00 |
| 2016–17 | 57.34 | – | – | – | 198.45 | – | 255.79 |
| 2017–18 | – | – | 385.23 | – | 261.63 | 2247.39 | 2894.25 |
| 2018–19 | 125.00 | – | – | – | 325.47 | 487.55 | 938.02 |
| **மொத்தம்** | **526.45** | **48.80** | **463.87** | **81.03** | **1323.69** | **2850.94** | **5294.78** |

## iii. உதவித் தொகை:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | விபத்தின்றிப் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு முதலமைச்சரின் விருது | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2011–12 | 20.00 | – | 2.78 | 22.78 |
| 2012–13 | 20.00 | 200.00 | 2.78 | 222.78 |
| 2013–14 | 20.00 | 500.00 | 1.60 | 521.60 |
| 2014–15 | 20.00 | 600.00 | 2.78 | 622.78 |

| ஆண்டு | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | விபத்தின்றிப் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு முதலமைச்சரின் விருது | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2015–16 | 30.00 | 256.72 | 2.78 | 289.50 |
| 2016–17 | 30.00 | 617.17 | 5.88 | 653.05 |
| 2017–18 | 30.00 | 816.12 | 3.86 | 849.98 |
| 2018–19 | 30.00 | 333.08 | 3.00 | 366.08 |
| மொத்தம் | **200.00** | **3323.09** | **25.46** | **3548.55** |

**iv. மாணவர், மூத்த குடிமக்கள் மற்றும் இதர பயணச் சலுகைக்கான கட்டணங்களை ஈடுசெய்தல்:** 2011–2012 முதல் 2018–2019 வரையிலான ஆண்டுகளில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) மாணவர் பயணக் கட்டணச் சலுகையை ஈடுசெய்வதற்காக ரூ.4084.30 கோடியும், மூத்த குடிமக்களுக்கான பயணச் சலுகையை ஈடுசெய்வதற்காக மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.60 கோடியும் மற்றும் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களால் வழங்கப்பட்ட இதர பயணச் சலுகைகள் அரசால் ஈடுசெய்யப்பட்டுள்ளது.

**2.12 உயர்வேக டீசல் (HSD) ஈடுசெய்தல்:** அதிவேக டீசல் விலையின் உயர்வினால் ஏற்பட்ட கூடுதல் செலவினத்தை

ஈடுசெய்ய போக்குவரத்துக் கழகங்களுக்கு **2012–2013–**இல் ரூ.**200** கோடியும், **2013–2014–**இல் ரூ.**500** கோடியும், **2014–2015–**இல் ரூ.**600** கோடியும், **2015–2016–**இல் ரூ.**256.72** கோடியும், **2016–2017–**இல் ரூ.**617.17** கோடியும், அரசு இழப்பீடு வழங்கியுள்ளது. **2017–2018–**ஆம் ஆண்டில், பேருந்துக் கட்டணம் மாற்றியமைக்கப்பட்ட நாளான **20.01.2018** வரை அரசு ரூ.**816.12** கோடியினை வழங்கியுள்ளது. தற்போது, **20.01.2018–**லிருந்து (பேருந்து கட்டணம் திருத்தம்) டீசலுக்கான அடிப்படை விலையை அரசே நிர்ணயித்தும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் அடிப்படை விலைக்கு மேல் ஆகக்கூடிய கூடுதல் செலவுகளை ஈடுசெய்ய அனுமதியும் அளித்துள்ளது. அதனடிப்படையில், **2018–19–**ஆம் ஆண்டிற்கு ரூ.**333.08** கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், **2019–2020** ஆண்டிற்கான வரவு–செலவு திட்டத்தில் ரூ.**250** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–3

## சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள்

**3.1** போக்குவரத்துத் துறையானது சாலைப் பாதுகாப்பு குறித்த தீவிர பணிகளை மேம்படுத்துவதில் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகிறது. மேலும், விபத்துகளுக்கான காரணங்களை ஆய்வு செய்து அதனைக் குறைக்கும் பொருட்டு நிலையான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பேருந்து ஏறும் இடம் / இறங்கும் இடத்தில் ஏற்படக்கூடிய விபத்து, குறிப்பிட்ட மாதம் / குறிப்பிட்ட நாளில் / குறிப்பிட்ட நேரத்தில் அடிக்கடி ஏற்படக்கூடிய விபத்து, சாலையின் தன்மை, பலவகையான பயனாளிகள் குறித்தும் ஆய்வு செய்யப்படுகிறது.

**3.2 சாலை விபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள்:**
சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு மாநில அரசு போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்காணும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

i. தொடர் பயிற்சி, பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு மற்றும் சம்மந்தப்பட்டவர்களை ஊக்குவித்தல்.

ii. விபத்துக்கள் அதிகமாக நடைபெறும் இடங்களை கண்டறிதல்.

iii. வாகனம் ஓட்டும்பொழுது கைபேசி உபயோகித்தல் மற்றும் மது அருந்துதல் ஆகியவை முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

iv. போக்குவரத்துத்துறை மற்றும் மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களின் பறக்கும்படை உதவியுடன் சுவாசப் பரிசோதனைக் கருவிகளைக் கொண்டு, பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனைகள் நடத்துதல். மேலும் காவல் துறையின் மூலமும் தொடர் கண்காணிப்பில் ஈடுபடச் செய்தல்.

v. ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

vi. அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளை கண்டறிந்து நெடுஞ்சாலைத் துறை மற்றும் காவல்துறை உதவியுடன் சாலைகளை மேம்படுத்துதல், போக்குவரத்து தொடர்பான எச்சரிக்கை பலகைகள் வைப்பது மற்றும் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த இடங்களில்

அறிவிப்புப் பலகைகளை நிறுவுதல் ஆகியவற்றின் மூலம் விபத்து ஏற்படுவதை தடுத்தல்.

vii. விபத்தின்றிப் பணிபுரியும் அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதலமைச்சரின் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுக்காக, 2011–2019–ஆம் ஆண்டுகளில் ரூ.25.46 கோடி அரசால் பின்வருமாறு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | தொகை |
|---|---:|
| 2011–2012 | 2.78 |
| 2012–2013 | 2.78 |
| 2013–2014 | 1.60 |
| 2014–2015 | 2.78 |
| 2015–2016 | 2.78 |
| 2016–2017 | 5.88 |
| 2017–2018 | 3.86 |
| 2018–2019 | 3.00 |
| **மொத்தம்** | **25.46** |

கடந்த ஆறு ஆண்டுகளில் உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2013–2014 | 20,684 | 1,187 | 1,318 |
| 2014–2015 | 20,684 | 1,165 | 1,331 |
| 2015–2016 | 20,839 | 1,258 | 1,460 |
| 2016–2017 | 20,776 | 1,209 | 1,373 |
| 2017–2018 | 19,490 | 1,085 | 1,247 |
| 2018–2019 | 19,489 | 1,033 | 1,159 |

**2015–2016** முதல் விபத்துகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்துகொண்டே வந்துள்ளது. இதற்கான முயற்சி இனியும் தொடரும்.

**3.3 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்:** அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும், நீதிமன்றத்தை நாடாமல் விரைவாக விபத்து இழப்பீட்டை வழங்கும் பொருட்டு விபத்து இழப்பீட்டுத்

தொகை நிதியம் (Corpus Fund) ஒன்று **2010**–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன்படி, **2010–11, 2011–12, 2012–13, 2013–14** மற்றும் **2014–15** ஆகிய ஆண்டுகளில் முறையே அரசின் பங்காக ஆண்டொன்றுக்கு ரூ.**20** கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.**20** கோடியையும் சேர்த்து ஆகமொத்தம் ரூ.**40** கோடியில் விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் ஏற்படுத்தப்பட்டது. இந்த விபத்து இழப்பீட்டுத் தொகை நிதி **2015–16**–ஆம் ஆண்டு முதல் ரூ.**40** கோடியிலிருந்து ரூ.**60** கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.**30** கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.**30** கோடியும் வழங்கப்படுகிறது. மேற்படி நிதியம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது. **20.01.2018** முதல் பேருந்து பயணிகளிடம் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தீர்வை வசூல் செய்து அதனைக் கொண்டு விபத்து இழப்பீடு, விபத்து தடுப்பு மற்றும் சுங்கக் கட்டணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.

(ரூபாயில்)

| வ. எண். | பயண கட்டண வரம்பு | நகர் | புறநகர் |
|---|---|---|---|
| | | பயணிகளிடமிருந்து தீர்வை | பயணிகளிடமிருந்து தீர்வை |
| 1 | ரூ.25 வரை | 1 | 1 |
| 2 | ரூ.26 முதல் ரூ.50 வரை | – | 2 |
| 3 | ரூ.51 முதல் ரூ.75 வரை | – | 3 |
| 4 | ரூ.76 முதல் ரூ.100 வரை | – | 4 |
| 5 | ரூ.101 முதல் ரூ.200 வரை | – | 5 |
| 6 | ரூ.201 முதல் ரூ.300 வரை | – | 6 |
| 7 | ரூ.301 முதல் ரூ.400 வரை | – | 7 |
| 8 | ரூ.401 முதல் ரூ.500 வரை | – | 8 |
| 9 | ரூ.501 –க்கு மேல் | – | 10 |

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் இசைவுடன் (consent) கீழே குறிப்பிட்டுள்ளவாறு இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்படும்.

### i. உயிரிழப்பிற்கான இழப்பீட்டுத் தொகை:

(ரூபாய் இலட்சத்தில்)

| வயது வரம்பு | தொகை |
|---|---|
| 1 – 15 | 2.5 |
| 16 – 60 | 5.0 |
| 60 வயதுக்கு மேல் | 2.5 |

ii. **காயங்களுக்கான இழப்பீட்டுத் தொகை:**

(ரூபாயில்)

| | | |
|---|---|---|
| **1)** | சிறுகாயம் – I<br>சிறுகாயம் – II<br>மருத்துவமனையில் சிகிச்சை (2 நாட்கள்) | 10,000<br>25,000 |
| **2)** | தலை காயம் மற்றும் நிரந்தர உறுப்பு இழப்பு | 5,00,000 |
| **3)** | கொடுங்காயம் மற்றும் எலும்பு முறிவு – மருத்துவமனை தீவிர சிகிச்சை (7 நாட்கள்)<br>எலும்பு முறிவு – மருத்துவமனை தீவிர சிகிச்சை (4 நாட்கள்) | 2,00,000<br>1,00,000 |

விபத்து இழப்பீட்டினை விரைவாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் இசைவுடன் நீதிமன்றத்திற்கு அப்பாற்பட்டு வழங்கும் பொருட்டு ஒரு குழுவும் மற்றும் இழப்பீட்டு தொகை வழங்குவதற்கான வழிமுறையும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. **31.03.2019** வரை அரசு போக்குவரத்துக் கழகங்களால் இத்திட்டத்தின் மூலம் **28** வழக்குகளுக்கு ரூ.**71.60** இலட்சம் நேரிடையாக வழங்கப்பட்டுள்ளது.

**3.4 தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழக விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான நிதியம்:** அரசாணையின்படி, தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழக விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான நிதியத்தை உருவாக்கி அது சென்னை அசோக்நகர், சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியத்திற்கு நிரந்தர கணக்கு எண். (PAN No. AADTT4509Q) பெறப்பட்டு வருமான வரித்துறையில் "12A" பதிவிற்காக விண்ணப்பிக்கப்பட்டது. மேலும், இந்த நிதியத்திற்கான பணிகள் குறித்த சட்டம் மற்றும் விதிமுறைகளை (Rules and Regulations) உருவாக்குவற்காக ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. மேற்படி, விதிமுறைகள் வழக்கறிஞரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. நிதியத்தின் நடைமுறை பணிகளை மேற்கொள்ள வங்கி கணக்கு அவசியமானதாகும். அதன்படி, 15.03.2019 அன்று நடைபெற்ற முதல் நிதியக் கூட்டத்தின் ஒப்புதலின்படி நிதியத்திற்காகவும், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்காகவும் சேமிப்பு வங்கி கணக்கு துவக்கப்பட்டு அரசிற்கு விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3.5 மக்கள் நீதிமன்றம்:** மக்கள் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு செய்யப்பட்ட விபத்து இழப்பீட்டு வழக்குகளுக்கு, அனைத்து

அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் தொகுப்பு நிதியிலிருந்து இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி, கடந்த எட்டு ஆண்டுகளில், தீர்வு செய்யப்பட்ட வழக்குகளுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களினால் வழங்கப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு:

**(ரூபாய் இலட்சத்தில்)**

| ஆண்டு | வழக்குகளின் எண்ணிக்கை | மக்கள் நீதிமன்றம் மூலமாகத் தீர்வு செய்யப்பட்ட தொகை |
|---|---:|---:|
| 2011–2012 | 884 | 997.21 |
| 2012–2013 | 1,867 | 3,466.29 |
| 2013–2014 | 1,160 | 569.22 |
| 2014–2015 | 897 | 1, 028.14 |
| 2015–2016 | 479 | 1 ,222.62 |
| 2016–2017 | 404 | 1,241.25 |
| 2017–2018 | 1,187 | 4,883.14 |
| 2018–2019 | 2,832 | 15,964.20 |
| **மொத்தம்** | **9,710** | **29,372.07** |

**14.07.2018** அன்று நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தில் அதிகபட்சமாக **592** வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.**41.42** கோடியினை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் வழியாக வழங்க உத்தரவிடப்பட்டது. அதில் ரூ.**39.15** கோடி பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

## அத்தியாயம்–4

## பொதுமக்களுக்கான சேவைகளை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

**4.1 பேருந்துகளின் இயக்கம்:** 31.03.2019 அன்றுள்ளவாறு தற்போது அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகளின் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 19,489 ஆகும். 2017–2018–ஆம் ஆண்டில் வழித்தட சீரமைப்பு நடவடிக்கைகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன. பொதுவான பேருந்து வழித்தடங்களில் அளவுக்கு அதிகமான பேருந்து சேவை, போக்குவரத்துக் கழகங்களுக்கிடையே நிலவும் ஆரோக்கியமற்ற போட்டி மற்றும் மக்களால் குறைவாக பயன்படுத்தப்படும் வழித்தடங்கள் போன்றவற்றை ஆராய்ந்து 1,286 சேவைகள் ஏற்கனவே இயக்கப்படும் சேவைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதே போன்று, 2018–2019–ஆம் ஆண்டில் 584 சேவைகள் உகந்ததற்றதாக கண்டறியப்பட்டது. குறிப்பிட்ட பகுதிகளிலோ / சேவைகளின் மூலமோ சமுதாயத் தேவைகள் எவ்விதத்திலும் பாதிக்காத வண்ணம் இந்த சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பயணிகளின் நலன் கருதி, கடந்த எட்டு ஆண்டுகளில் 1,525 புதிய

வழித்தடங்களும் மாநிலம் முழுவதும் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**4.2 புதிய பேருந்துகள் அறிமுகம்:** அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பயன்படுத்தப்பட இயலாத நிலையிலிருக்கும் மிகவும் பழமையான பேருந்துகளுக்குப் பதிலாக கடந்த எட்டு ஆண்டுகளில் 12,153 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், 2011–2019–ஆம் ஆண்டுகளில், மலை சார்ந்த பகுதிகளுக்கு 208 பேருந்துகளும், 300 சிற்றுந்துகளும் வாங்குவதற்கு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. அதன் விவரங்கள் பின்வருமாறு :

| ஆண்டு | பேருந்துகளின் எண்ணிக்கை | மலைப் பகுதிப் பேருந்துகளின் எண்ணிக்கை | சிற்றுந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011–2012 | 3,000 | – | – |
| 2012–2013 | 2,953 | – | 100 |
| 2013–2014 | – | 208 | – |
| 2014–2015 | 1,200 | – | 100 |
| 2016–2017 | 2,000 | – | 100 |
| 2018–2019 | 3,000 | – | – |
| **மொத்தம்** | **12,153** | **208** | **300** |

**4.3 புதிய பணிமனைகள்:** 31.03.2019 அன்றுள்ளவாறு, அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளின் எண்ணிக்கை 322 ஆகும். 74 புதிய பணிமனைகள் அமைக்கப்படும் நடவடிக்கையில், 43 பணிமனைகள் ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளன. மேலும், 5 பணிமனைகளின் கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மீதமுள்ள பணிமனைகளின் கட்டுமானப் பணிகளையும் விரைந்து முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**4.4 சென்னையில் சிற்றுந்துகள் அறிமுகம்:** பேருந்து வசதிகள் இல்லாத பகுதிகளை பிரதானச் சாலைகளுடன் இணைப்பதற்கு வசதியாக சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில், 82 வழித்தடங்களில் 189 சிற்றுந்துகள், 21 உபரி சிற்றுந்துகள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள், மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

**4.5 மகளிர் சிறப்புப் பேருந்துகள்:** சென்னையில் பரபரப்பான நேரங்களில் மகளிர் மற்றும் சிறுவர்கள் பயன்பெறும் வகையில் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் 73 வழித்தடங்களில்

250 மகளிர் மற்றும் சிறுவர்கள் சிறப்புப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

**4.6 மாற்றுத்திறனாளிகளுக்கான பேருந்துகள்:** மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக 10 நட்புப் பேருந்துகள் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டு சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வசதி இதர போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும்.

**4.7 மலைப்பகுதிகளில் சிற்றுந்துகள்:** மலைப்பகுதிகளில் குறுகலான பாதைகளினால் போக்குவரத்து வசதியில்லாத இடங்களில் ரூ.35 கோடி செலவில் மலைப்பகுதிகளுக்காக 208 சிற்றுந்துகளை வாங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இதுவரையில், 79 சிற்றுந்து சேவைகள் அப்பகுதிகளில் இயக்கப்பட்டு வருகின்றன.

**4.8 உணவகம் மற்றும் கழிவறை வசதியுடன் கூடிய பேருந்து:** உணவகம் மற்றும் கழிவறை வசதிகளுடன் கூடிய 16 பேருந்துகள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வகை பேருந்துகள் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

**4.9 விழாக்காலச் சிறப்புப் பேருந்துகள்:** தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய விழாக்காலங்களில் இயக்கப்படும் பேருந்துகளின் மூலம் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் குறிப்பிடத்தக்க வருவாய் ஈட்டியுள்ளன. கடந்த ஏழு ஆண்டுகளில் இயக்கப்பட்ட சிறப்பு நடைகள் மற்றும் அவற்றின் வருவாய் விவரங்கள் பின் வருமாறு:

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | பண்டிகை | இயக்கப்பட்ட சிறப்பு நடைகளின் எண்ணிக்கை | ஈட்டிய மொத்த வருவாய் |
|---|---|---|---|
| 2012–2013 | தீபாவளி<br>பொங்கல் | 7,958<br>7,135 | 87.37<br>89.70 |
| 2013–2014 | தீபாவளி<br>பொங்கல் | 10,484<br>9,546 | 86.93<br>93.41 |
| 2014–2015 | தீபாவளி<br>பொங்கல் | 10,499<br>8,548 | 83.96<br>81.86 |
| 2015–2016 | தீபாவளி<br>பொங்கல் | 15,540<br>7,160 | 83.92<br>90.51 |
| 2016–2017 | தீபாவளி<br>பொங்கல் | 15,033<br>13,337 | 85.75<br>95.05 |
| 2017–2018 | தீபாவளி<br>பொங்கல் | 14,113<br>13,407 | 89.36<br>75.80 |
| 2018–2019 | தீபாவளி<br>பொங்கல் | 11,503<br>11,914 | 101.24<br>109.53 |

**4.10 தாமாகவே முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் **16,888** போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் இரத்ததானம் செய்வதற்குத் தங்களின் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

**4.11 மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் மின்கலம் (Battery) மூலம் இயக்கக்கூடிய பேருந்துகள் அறிமுகம்:** 28.03.2018 அன்று C40 நகரங்கள் காலநிலை தலைமைக் குழுவுடன் தமிழக அரசு "தூய்மையான பேருந்து அறிவிப்பில்" கையொப்பமிட்டது. இவ்வறிவிப்பில் அரசு கையொப்பமிட்டதன் மூலம் மாசுபாடற்ற மின்சார பேருந்துகளும், குறைந்த மாசினை வெளிப்படுத்தும் பேருந்துகளும் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்படும். இந்தியாவிலேயே, தமிழ்நாடு தான் இவ்வறிவிப்பில் கையொப்பமிட்டுள்ள முதல் மாநிலமாகும். போக்குவரத்து கழகங்களை மறு கட்டமைப்பின் மூலம் நவீனமயமாக்கல் திட்டத்தில் வரும் ஆண்டுகளில் **2,000** மின்சார பேருந்துகளும், **12,000** BS VI ரக பேருந்துகளும் படிப்படியாக வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, **100** மின்சார பேருந்துகள் வாங்க KfW, Germany நிதியுதவி வழங்கும். இதில் **80** பேருந்துகள் சென்னையிலும், **10** பேருந்துகள் மதுரையிலும் மற்றும்

10 பேருந்துகள் கோயம்புத்தூரிலும் இயக்கப்படும். மேலும், பசுமை காலநிலை நிதித்திட்டத்தின்கீழ் (Green Climate Fund) மேலும், 250 மின்சாரப் பேருந்துகளை NABARD நிதியுதவி மூலம் கொள்முதல் செய்ய சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் திட்டக்குறிப்பு (ம) முன்செயல்முறை அறிக்கையினை நடுவண் அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**4.12 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் படுக்கை வசதியுடன் கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகம்:** அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் படுக்கை வசதியுடன் கூடிய 34 குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் 30 குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதிகளுடன் கூடிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# அத்தியாயம்–5

## பயணக் கட்டணச் சலுகை

**5.1 பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படும் பயனாளிகளின் வகைகள் பின்வருமாறு:**

i. நாடாளுமன்ற / சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள்.

ii. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் / ஊடக நபர்கள்.

iii. மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள், வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.

iv. புற்று நோயாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் (காதுகேளாதோர், வாய்பேசாதோர், பார்வையற்றோர், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்).

v. நாடகக் கலைஞர்கள்

vi. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள்

vii. மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை– 24.02.2016 முதல் குளிர்சாதன பேருந்துகளை தவிர்த்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும்.

**5.2 மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்:** பள்ளி செல்லும் குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில், பின்வரும் கட்டணமில்லாப் பயணச் சலுகை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) வழங்கப்பட்டு வருகிறது. இச்சலுகைக்கானத் தொகையை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

(i) அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை.

(ii) தேசிய குழந்தை மற்றும் தொழிலாளர் திட்ட நலப்பள்ளி.

(iii) அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்.

(iv) அரசு தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

(v) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.

மேற்கண்ட சலுகை 2013–14–ஆம் ஆண்டு முதல் பின்வரும் கல்வி நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இச்சலுகைக்கானத் தொகையை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

1) சமுதாயக் கல்லூரிகள்.

2) அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

3) இசைக் கல்லூரிகள்.

4) சென்னை மாநகராட்சித் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

**5.3 50 % பயணக் கட்டணச் சலுகை:**

| | | |
|---|---|---|
| (i) | தனியார் கல்லூரிகள் | அரசு அங்கீகாரம் பெற்றவை |
| (ii) | தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள் | |
| (iii) | தனியார் பொறியியல் கல்லூரிகள் | |

**5.4 மாற்று அனுமதிச் சீட்டுகள்:** சென்னை மாநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவ, மாணவியர், தங்கள் இல்லத்திலிருந்து நூலகம் சென்று வர 60 மாற்று அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

**5.5 மாணவர்களுக்கு பேருந்து பயணச் சலுகைக்கான செலவினத்தை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடுசெய்தல்:** பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற் பயிற்சிக் கூடங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பேருந்துப் பயணக் கட்டணச் சலுகை அட்டைகள் வழங்கியதால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்யும் வகையில் அரசால் வழங்கப்பட்ட நிதி விவரங்கள் பின்வருமாறு :

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | ஆண்டு | தொகை |
|---|---|---|
| 1 | 2011–2012 | 438.97 |
| 2 | 2012–2013 | 452.52 |
| 3 | 2013–2014 | 452.96 |
| 4 | 2014–2015 | 448.00 |
| 5 | 2015–2016 | 480.00 |
| 6 | 2016–2017 | 505.35 |
| 7 | 2017–2018 | 541.78 |
| 8 | 2018–2019 | 764.72 |
| மொத்தம் | | **4084.30** |

நடப்பு நிதியாண்டு **2019–2020** வரவு–செலவுத் திட்டத்தில், மாணவ, மாணவியருக்கான பயணச் சலுகை வழங்கியதற்கான செலவினங்களை ஈடு செய்வதற்கு ரூ.**766.85** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

**5.6 இணையவழி முன்பதிவு:** அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொலைதூரப் பயணம் செய்யும் பயணிகளுக்கு உதவும் வகையில் இணையவழி மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை **03.10.2011** முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **2018–2019**–ஆம் ஆண்டில் மொத்த முன்பதிவில் இணையவழி முன்பதிவு **60.14** சதவீதமாக உயர்ந்துள்ளது.

**5.7 விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திரப் பயணச் சீட்டுகள்:** அரசு நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளில், மாதாந்திரப் பயணச் சீட்டானது, ஒரு சீட்டுக்கு ரூ.**1,000/–** கட்டண விகிதத்தில் விருப்பம் போல்

பயணம் செய்ய பயணச் சீட்டுகள் சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன.

**5.8 மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை:** தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக, மாநகர் மற்றும் நகரப் பகுதிகளில் பயன்பாட்டில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டணச் சலுகையானது, 2013–2014–ஆம் ஆண்டு முதல் புறநகர் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் புறநகர் பேருந்துகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**5.9 குழுப் பயணச் சீட்டு சலுகை:** அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் இதர போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பயணிகள் குழுவாக முன்பதிவு செய்யும்போது பயணக்கட்டணத்தில் 10 சதவீதம் கட்டணக் கழிவுத் தொகை 2013–14–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. இச்சலுகையின் மூலம் 26,788 குழுப் பயணச்சீட்டுகள் இதுவரையில் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. 31.03.2019 அன்றுள்ளவாறு, 3,45,557 பயணிகள் ரூ.111.05 இலட்சத்திற்கு சலுகை பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.

**5.10 மின்னணுப் பயணச்சீட்டு வழங்கும் கருவிகள்:** புவி இருப்பிட முறைமையை (GPS) அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்ப மின்னணுப் பயணச்சீட்டு இயந்திரம், பயணிகளுக்கும் நடத்துநர்களுக்கும் உதவியாக உள்ளதோடு, நடத்துநர்கள் பயணச்சீட்டு வழங்குவதற்கும், கணக்கிடுவதற்கும் எளிதாக உள்ளது. மேலும், போக்குவரத்துக் கழகங்கள் தங்களின் இயக்கச் செயல்பாட்டுத் திறனை வளர்த்துக் கொள்ளவும், கணக்கீட்டை உறுதி செய்யவும் பெரிதும் உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் 24,751 மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக ரூ.31.66 கோடி அரசால் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**5.11 புற்று நோயாளிகளுக்கான பயணக் கட்டணச் சலுகை:** மிகவும் ஏழ்மையான மற்றும் கிராமப்புறங்களிலிருந்து சிகிச்சைக்காக புற்றுநோய் மருத்துவமனைக்கு வரும் புற்றுநோயாளிகளின் நிதிநெருக்கடியைக் குறைப்பதற்காக அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்யும் நோயாளிகளுக்கு அரசு பயணச்சலுகை வழங்கி வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில், புற்றுநோயாளிகளுக்கு வழங்கிவரும் பயணச் சலுகைத் தொகையை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு திருப்பி செலுத்தி வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | தொகை |
|---|---|
| 2014–15 | 0.18 |
| 2015–16 | 0.18 |
| 2016–17 | 1.02 |
| 2017–18 | 0.59 |
| 2018–19 | 0.68 |

# அத்தியாயம்–6

## வருவாய் மேம்பாட்டு நடவடிக்கைகள்

**6.1 கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில்நுட்ப முறையில் ஏலமிடுதல்:** அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏலமிடவும் மற்றும் அதற்கான சிறந்த விலை கிடைக்கும் பொருட்டு மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி (M/s. MSTC) சேவை நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பயனாக, கடந்த எட்டு ஆண்டுகளில் **(2011–2019) 6,489** பேருந்துகளைக் கழிவு செய்ததில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.**85.97** கோடியை வருவாயாக ஈட்டியுள்ளன.

**6.2 விளம்பரங்கள் மூலம் வருவாய்:** போக்குவரத்துக் கழகங்கள் கடந்த எட்டு ஆண்டுகளில், பேருந்துகளில் விளம்பரத்திற்கான பலகைகள் வைக்கப்பட்டு அதன் மூலமாக ரூ.**119.48** கோடியை வருவாயாக ஈட்டியுள்ளன.

**6.3 பயணவழி உணவகங்கள்:** தொலைத்தூர வழித்தடங்களில் பயணிகளுக்கு சிறப்பான வசதி அளிக்கும்

பொருட்டு, தமிழகம் முழுவதும் **25** இடங்களில் பேருந்துகளை நிறுத்த கூடுதல் இடவசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, நவீன சமையல் கூடம், உணவு அருந்தும் இடம், தரமான உணவு மற்றும் சுகாதாரமான கழிப்பிட வசதி போன்றவை உள்ள பயணவழி உணவகங்கள் மூலமாக உணவு மற்றும் சிற்றுண்டி நியாயமான விலையில் வழங்கப்படுகிறது**.** இதன் மூலம், கடந்த எட்டு ஆண்டுகளில் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் ரூ**.27.58** கோடி வருவாய் ஈட்டியுள்ளன**.**

**6.4 சிப்பஞ்சல் மற்றும் தூதஞ்சல் சேவை:** அரசுப் பேருந்துகளில் சிப்பஞ்சல் (Parcel services) மற்றும் தூதஞ்சல் (Courier services) சேவைகள் மூலமாக கடந்த எட்டு ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ**.4.06** கோடி வருவாய் ஈட்டியுள்ளன**.**

**6.5 அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் சீரமைப்பு மற்றும் சிக்கன நடவடிக்கைகள்:** மூலதனங்களை சிறப்பாக பயன்படுத்துதல், அரசு போக்குவரத்துக் கழகங்களின் சொத்துக்களை உகந்த வழியில் பயன்படுத்துதல் மற்றும்

செலவினங்களை குறைக்கும் பொருட்டு மாற்று ஏற்பாடுகள் கண்டறிதல் போன்றவற்றின் மூலம் போக்குவரத்துக் கழகங்களின் இயக்கம் மற்றும் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்காக சீரமைப்பு மற்றும் சிக்கன நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு அரசால் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அதனடிப்படையில் அரசு போக்குவரத்துக் கழகங்களில் செலவுகளை குறைக்கவும் மற்றும் வருவாய் திறன்களை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

# அத்தியாயம்–7

## பணியாளர்களின் நலன்களுக்கான நடவடிக்கைகள்

அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் மொத்தம் 1,31,298 பணியாளர்களைக் கொண்டுள்ளது. 537 மேலாண்மை அலுவலர்கள், 54,042 ஓட்டுநர்கள், 52,135 நடத்துநர்கள், 16,043 தொழில்நுட்ப பணியாளர்கள், 1,530 போக்குவரத்து மேற்பார்வையாளர்கள், 1,701 தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள், 674 அலுவலக மேற்பார்வையாளர்கள் மற்றும் 4,636 நிர்வாக மற்றும் இதர பணியாளர்கள் ஆகும். இப்பணியாளர்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட நல நடவடிக்கைகள் விவரம் பின்வருமாறு:

**7.1 காலிப் பணியிடங்களை நிரப்புதல்:** அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் கீழ்க்கண்டவாறு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

| ஆண்டு | சேம ஓட்டுநர் | சேம நடத்துநர் | தொழில் நுட்பம் | கருணை அடிப்படையிலான பணி நியமனம் | மொத்தப் பணி நியமனம் |
|---|---|---|---|---|---|
| 2011–19 | 15,588 | 15,200 | 4,781 | 2,213 | 37,782 |

**7.2 அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பணி வரன்முறை செய்தல்:** கடந்த ஏழு ஆண்டுகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த ஓட்டுநர், நடத்துநர் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு:

| ஓட்டுநர் | நடத்துநர் | தொழில் நுட்பம் | மொத்தம் |
|---|---|---|---|
| 20,349 | 21,242 | 5,225 | 46,816 |

**7.3 முழு உடற்பரிசோதனை:** ஊழியர்களின் உடல் நலம் மற்றும் நல்வாழ்விற்கு இத்துறை மிகவும் முக்கியத்துவம் வழங்கி வருகிறது. இந்த நோக்கத்திற்காக, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் 45 வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்களுக்கு முழு உடற்பரிசோதனைத் திட்டம் 2012–13–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம், 2013–14–ஆம் ஆண்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**7.4 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு பணப்பலன்கள்:** **2011–**ஆம் ஆண்டிலிருந்து போக்குவரத்துக் கழகங்களில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய ஓய்வு கால பணப்பலன்களாகிய பணிக்கொடை மற்றும் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்திற்கு ரூ.**2736.06** கோடியும், ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு சேமநல நிதியாக ரூ.**1370** கோடியும் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | பணிக்கொடை | | விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் | மொத்தம் | சேமநலநிதி | |
|---|---|---|---|---|---|---|
| | பணியாளர்–களின் எண்ணிக்கை | தொகை | | | பணியாளர்–களின் எண்ணிக்கை | தொகை |
| 2011–2012 | 1,609 | 42.60 | 9.61 | 52.21 | 1,995 | 148.27 |
| 2012–2013 | 2,292 | 82.10 | 17.17 | 99.27 | 3,229 | 61.90 |
| 2013–2014 | 5,652 | 194.35 | 14.51 | 208.86 | 4,065 | 97.91 |
| 2014–2015 | 1,664 | 68.76 | 2.16 | 70.92 | 4,490 | 129.59 |
| 2015–2016 | 3,108 | 137.00 | 11.31 | 148.31 | 4,240 | 135.82 |
| 2016–2017 | 2,491 | 182.90 | 61.83 | 244.73 | 3,810 | 138.18 |
| 2017–2018 | 27,845 | 1,211.07 | 393.24 | 1,604.31 | 12,420 | 557.25 |
| 2018–2019 | 3,527 | 204.91 | 102.54 | 307.45 | 5,147 | 101.08 |
| மொத்தம் | **48,188** | **2,123.69** | **612.37** | **2,736.06** | **39,396** | **1,370.00** |

மீதமுள்ள நிலுவைத் தொகையை விரைவாக வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**7.5 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதியம்:** போக்குவரத்து பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் அரசால் 01.09.1998 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. 31.03.2003 அன்றும் அதற்கு முன்பும் பணியில் சேர்ந்த பணியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் வருவர். தற்போது, இத்திட்டத்தின்கீழ் 1.28 இலட்சம் பணியாளர்கள் உள்ளனர். இத்திட்டத்தினை செயல்படுத்த, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதியம் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

**7.6 ஓய்வூதியம் வழங்கல்:** கடந்த எட்டு ஆண்டுகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதியம் வழங்கிய ஓய்வூதியங்கள் விவரம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | ஆண்டு | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட ஓய்வூதியம் |
|---|---|---|---|
| 1. | 2011–12 | 39,928 | 274.60 |
| 2. | 2012–13 | 44,811 | 382.33 |
| 3. | 2013–14 | 50,103 | 525.48 |

| வ. எண். | ஆண்டு | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட ஓய்வூதியம் |
|---|---|---|---|
| 4. | 2014–15 | 55,300 | 596.67 |
| 5. | 2015–16 | 60,729 | 800.76 |
| 6. | 2016–17 | 65,855 | 865.83 |
| 7. | 2017–18 | 70,907 | 963.42 |
| 8. | 2018–19 | 76,663 | 1,086.83 |

ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய பல்வேறு சட்டரீதியான பணப்பலன்கள் மற்றும் தாமதமாக வழங்கப்பட்ட ஓய்வூதிய நிலுவைத் தொகைக்கான வட்டி முதலியன வழங்கும் பொருட்டு **2018–2019–**ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்ட நிதியினை வழங்கியுள்ளது:

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | சட்ட ரீதியான பணப்பலன்கள் | தொகை |
|---|---|---|
| 1. | சேமநல நிதி | 101.08 |
| 2. | பணிக்கொடை | 204.91 |
| 3. | விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் | 102.54 |
| 4. | ஓய்வூதிய ஒப்படைப்பு | 79.03 |
| | **மொத்தம்** | **487.56** |

**7.7 நலத்திட்டங்கள்:** போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலன் கருதி, பின்வரும் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

i. பணிக்கால அடிப்படையிலான சிறப்புச் சம்பள உயர்வு / ஆய்வுப் பலன்கள்.

ii. விடுப்புப் பலன்கள்

iii. திருப்பான் படி (Steering Allowance)

iv. கல்வி உதவித்தொகை.

v. சலுகைக் கட்டண உணவக வசதி.

vi. இலவசச் சீருடைகள் மற்றும் சலவைப்படி.

vii. திருமணக் கடன்.

viii. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்.

ix. இறுதிச் சடங்குச் செலவுகள்.

x. மாணவர்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு சென்றுவரக் கட்டணமில்லா பயண அனுமதிச்சீட்டு மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு ஆண்டிற்கு 5,500 கி.மீட்டர்.

xi. குடும்பநல நிதி.

xii. கொடைக்கானல், குற்றாலம் மற்றும் கன்னியாகுமரியில் விடுமுறை விடுதிகள்.

xiii. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (தமிழ்நாடு அரசு ஊழியர்கள் பயன்படுத்துவதுபோல).

xiv. பண்டிகை முன்பணம் ரூபாய் **5000/-.**

xv. கடந்த எட்டு ஆண்டுகளில்;

(அ) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க, தரமான அடிப்படை வசதிகளுடன் கூடிய ஓய்வறைகள் ரூ.**6.65** கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பணிமனைகளில் கான்கீரிட் தளம், பேருந்துகளின் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புக் கூடம் ஆகியவை ரூ.**35.71** கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## அத்தியாயம்–8

## ஓட்டுநர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்

இத்துறை, தொடர்ச்சியாக மறுபயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றால் விபத்து இல்லாத பயணத்தை அடையமுடியும் என்பதை நோக்கமாகக் கொண்டு பின்வரும் முயற்சிகளை எடுத்து வருகிறது:

i. ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு நவீனமுறைக் கற்பித்தல் மற்றும் பயிற்சி வசதிகளுடன் கூடிய மேம்பட்ட ஒரு கனரக வாகன ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், கும்மிடிப்பூண்டியிலுள்ள சாலை போக்குவரத்து நிறுவன வளாகத்தில் ரூ.15 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ii. மன அழுத்தத்தை குறைக்கவும், விபத்தில்லா பயணம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி விபத்தில்லா பயணத்தை உறுதி செய்ய ஓட்டுநர்களுக்கு முறையாக தொடர் மறுபயிற்சி அளிக்கப்படுகிறது.

iii. தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவி மூலம் சென்னை, திருச்சிராப்பள்ளி, பொள்ளாச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

iv. தமிழ்நாட்டில் 17 ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் மூலம் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இதுபோன்ற புத்தாக்கப் பயிற்சி, ஓட்டுதல் ஒத்த தன்மை கருவி மூலம் பயிற்சி, ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் மற்றும் ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் மூலம் விபத்துகள் குறைவதோடு, ஓட்டுநரின் திறன் மேம்படுவதால் டீசல் சிக்கனத்திற்கு வழிவகுக்கிறது.

## அத்தியாயம்–9

## அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

**9.1 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது, சென்னை:** மாநகர் போக்குவரத்துக் கழகம் மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இதன் தலைமையகம் பல்லவன் சாலையில் உள்ள பல்லவன் இல்லத்தில் அமைந்துள்ளது. மாநகர் போக்குவரத்துக் கழகம் தனியுரிமை பெற்று சென்னை நகரில் அதிகமான பேருந்துகளை இயக்கும் நிறுவனமாகும். மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை மற்றும் அதனை ஒட்டியுள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் நகரப் பேருந்துகளை இயக்குகிறது.

i. இக்கழகம் சாதாரண பேருந்து, விரைவுப் பேருந்து மற்றும் சொகுசுப் பேருந்துகளை இயக்கி வருகிறது. **31.03.2019** அன்று இப்போக்குவரத்துக் கழகம் **33** பணிமனைகளில், **3,679** பேருந்துகளை கொண்டு **3,439** நடைகளை **673** வழித்தடங்களில் ஒவ்வொரு நாளும் இயக்கி வருகிறது. தற்போது மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை **22,962** ஆகும்.

இக்கழகத்தின் இரண்டு பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் குரோம்பேட்டையில் அமைந்துள்ளன.

ii. பேருந்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பணிமனைகளை உயர்த்த பாடியநல்லூர், வேளச்சேரி, கண்ணகி நகர், மகாகவி பாரதி நகர், பெசன்ட் நகர், ஆதம்பாக்கம், குரோம்பேட்டை–2, பெரம்பூர்–2, குன்றத்தூர், பெரும்பாக்கம், தையூர், தாமரைப்பாக்கம் மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் புதிய பணிமனைகளை திறக்க சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. இவற்றுள் ஆதம்பாக்கம் மற்றும் பெசன்ட் நகர் ஆகிய பணிமனைகள் 19.02.2014 அன்றும் பாடியநல்லூர், மகாகவி பாரதி நகர், குரோம்பேட்டை–2, குன்றத்தூர், செம்மஞ்சேரி ஆகிய ஐந்து புதிய பணிமனைகள் 12.10.2015 அன்றும் மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. கண்ணகி நகர் பணிமனை 04.03.2017 அன்றும், பெரும்பாக்கம் பணிமனை 04.07.2017 அன்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டன.

iii. பேருந்து வசதி இல்லாத உட்புற பகுதிகளை அருகில் உள்ள முக்கிய சாலைகளுடன் இணைப்பதற்கு சிற்றுந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன. குறிப்பாக மெட்ரோ இரயில் மற்றும் பறக்கும் இரயில் நிலையங்களுடன் போக்குவரத்தினை இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iv. அனைத்து பணிமனைகளிலும் உள்ள பேருந்துகளில் விரைவாக பயணச் சீட்டு வழங்குவதற்காக புதிய கையடக்க மின்னணு பயணச் சீட்டுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

v. சென்னை மெட்ரோ இரயில் மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகம் இரண்டிலும் பயணம் செய்ய கூடிய வகையில் பொதுவான பயண அட்டை (ஸ்மார்ட் கார்டு) வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

vi. பயணிகள் பேருந்து பற்றிய தகவல் பெறும் வகையில் இணையதளம் மற்றும் கைபேசி பயன்பாடு (GPS மூலமாக) வடிவமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**இக்கழகத்தின் மூலம் பயணிகளுக்கு வழங்கும் கூடுதல் வசதிகள் பின்வருமாறு:**

i. 68 இரவு நேரப் பேருந்துகள் சென்னை மாநகரத்தின் முக்கிய பேருந்து முனையங்களை இணைக்கும் விதமாக தினசரி இயக்கப்படுகின்றன.

ii. தினமும் மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக 250 பேருந்துகள் 73 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகிறது.

iii. மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பாலூட்டும் தாய்மார்களுக்காக தனி அறை வசதி 27 பேருந்து நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

iv. மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் பேருந்துகளில் இலவச பயண வசதி 24.02.2016 அன்று துவக்கப்பட்டது, சராசரியாக ஒரு நாளைக்கு 43,674 மூத்த குடிமக்கள் பயணம் செய்கிறார்கள்.

பயணிகளின் திருப்தியை உறுதி செய்வதற்காக பேருந்து சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் பேருந்துகள் தொடர்ந்தார்போல் ஒரே நேரத்தில் பல பேருந்துகள் செல்வதை (bunching) தடுப்பது குறித்து நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

**9.2 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது, சென்னை:** இக்கழகம் மாநிலத்திற்குள்ளும், மாநிலங்களுக்கு இடையேயும், பேருந்துகளை இயக்குகின்றது. இக்கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள பல்லவன் சாலையில் அமைந்துள்ளது. மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 251 வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கி வருகிறது. அதில் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகம், கேரளா மற்றும் புதுச்சேரி ஆகியவற்றிற்கு 112 வழித்தடங்களும், தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்கு 139 வழிதடங்களும் இயக்கப்படுகின்றன. தற்பொழுது, கழகத்தில் மொத்தம் 1,133 பேருந்துகள் 22 பணிமனைகளின் மூலம் இயக்கப்படுகின்றன. அவற்றில் அதிநவீன மிதவை பேருந்து, குளிர்சாதன பேருந்து மற்றும் இருக்கை மற்றும் இருக்கையுடன் படுக்கும் வசதி

மற்றும் படுக்கை வசதி கொண்ட பேருந்துகள் மற்றும் குளிர்சாதன வசதி இல்லாத பேருந்துகள் அடங்கும். இக்கழகத்தில், மொத்தம் **5,541** தொழிலாளர்கள் பணியில் உள்ளனர். அவர்களில் ஓட்டுநர், நடத்துநர், தொழில்நுட்ப பணியாளர், போக்குவரத்து மற்றும் தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், அம்மா குடிநீர் மற்றும் பிற தொழிலாளர்கள் ஆகியோர் அடங்குவர்.

**பயணச்சீட்டு முன்பதிவு வசதி:** தற்பொழுது இக்கழகத்தில் **03.10.2011** முதல் இந்திய ரயில்வே மற்றும் விமான துறைகளைப் போலவே இணைய தளம் (e-Ticketing) மூலமாக முன்பதிவு செய்யும் வசதி பயணிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. முன்பதிவு வசதி **76** மையங்களில் **82** பதிவு அறைகள் மூலம் தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் செயல்பட்டு வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் ஒருவழித்தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத இடத்தில் முன்பதிவு செய்யும் பயணிகள் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர்முனையிலும் இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**கடந்த சில ஆண்டுகளில் புதிய முயற்சிகள்:** இந்தியாவிலேயே முதல்முறையாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் உணவகம் மற்றும் கழிப்பறை வசதியுடன் "கிளாசிக்" பேருந்து 20.06.2013 அன்று சென்னையிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் உள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்தின் 2.47 ஏக்கர் நிலப்பரப்பில் துவங்கப்பட்டு குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டு, குடிநீர் பாட்டில்கள் 234 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட இடங்களில் 306 விற்பனை நிலையங்களின் மூலமாக ரூபாய் 10/-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தலைமையகத்திலுள்ள அலுவலர்கள், பிற பணிமனையிலுள்ள கிளை மேலாளர்கள் மற்றும் பிற அலுவலர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளும் பொருட்டு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தலைமை அலுவலகம், பேருந்து நிலையம் போன்ற முக்கிய இடங்களை கண்காணிக்கவும் பயணிகள் போக்குவரத்தை கண்காணிக்கவும் ஆங்காங்கே CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. முக்கிய இடங்களுக்கு BRANDED பெயர்களுடன் 50 "முதன்மை சேவைகள்" (PREMIUM

SERVICES) இயக்கப்படுகின்றன. முன்பதிவு செய்த பயணிகளின் நன்மைக்காக, கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற முக்கியமான நகரங்களில் 13 இடங்களில் ஏறும் வசதி “PICK UP POINTS” ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் எளிதாக பயணம் செய்யும் வகையில் 2018–ஆம் ஆண்டின் தீபாவளி திருநாளின் போதும், 2019–ஆம் ஆண்டின் பொங்கல் திருநாளின் போதும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் பிரித்து இயக்கப்பட்டன. இதன் காரணமாக அனைத்து தரப்பு மக்களும் போக்குவரத்து நெரிசலின்றியும் மிகுந்த பயண நேரம் இல்லாமலும் பயணம் செய்ய ஏதுவாக இருந்தது. இந்த சிறப்பு பேருந்து இயக்கம் பொது மக்களிடத்திலும் மற்றும் அனைத்து தரப்பினரிடத்திலும் மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளது. மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் ஆணையின்படி அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் பேருந்து நிலையங்களில் தாய்மார்கள் பாலூட்டும் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**9.3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது, விழுப்புரம்:** தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது,

விழுப்புரம் நகரை தலைமை இடமாகக் கொண்டு நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம், நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் போக்குவரத்து சேவையை கண்காணிக்க விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 61 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 3,437 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 3,166 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 22,412 ஆகும். இக்கழகம் சாதாரண, விரைவு, சொகுசு மற்றும் குளிர்சாதன வசதியுடன்கூடிய பேருந்துகளை இயக்கி வருகின்றது. நெய்வேலி, ஓரிக்கை–1, ஓரிக்கை–2, சேத்துபட்டு, சின்னசேலம், போ்ணாம்பட்டு, சோளிங்கர், திருக்கழுக்குன்றம், செங்கம், காட்டுமன்னார்கோவில் மற்றும் ஏலாத்தூர் ஆகிய 11 இடங்களில் புதிய பணிமனைகள் அமைப்பதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு, இவற்றில் நெய்வேலி மற்றும் ஓரிக்கை–1 ஆகிய பணிமனைகள் 19.02.2014 அன்றும், சேத்துப்பட்டு பணிமனை 18.06.2015 அன்றும்,

காட்டுமன்னார்கோயில், சின்னசேலம் மற்றும் பேர்ணாம்பட்டு ஆகிய பணிமனைகள் **12.10.2015** அன்றும், ஓரிக்கை 2 மற்றும் சோளிங்கர் ஆகிய பணிமனைகள் **01.03.2016** அன்றும் மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன. மேலும் செங்கம் பணிமனை **04.03.2017** அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன. மீதமுள்ள பணிமனைகள் விரைவில் கட்டப்பட்டு திறக்கப்படும். இக்கழகத்தால், **281** எண்ணிக்கையிலான மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கு மக்கள் தீர்ப்பாயம் மூலம் இழப்பீடாக ரூ.**37.36** கோடி வழங்கப்பட்டு முடித்து வைக்கப்பட்டுள்ளன.

**சிறப்பு பேருந்துகள் இயக்கம்:** இயக்க பகுதிகளுக்குட்பட்ட அனைத்து பேருந்து நிலையங்களிலிருந்தும் பொது மக்கள் மற்றும் பக்தர்கள் வசதிக்காகவும், வழக்கமாகவும் பிரதி அமாவாசை (மேல்மலையனூருக்கு) மற்றும் பௌர்ணமி (திருவண்ணாமலைக்கு) ஆடிக்கிருத்திகை (திருத்தணிக்கு), தைப்பூசம் (வடலூர்), கூவாகம், தீபம், பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய திருவிழா மற்றும் முக்கிய நாட்களில் சிறப்பு

பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. 2018–2019–ஆம் ஆண்டில் மார்ச் 2019 வரை இச்சேவைகளின் மூலம் கழகம் ரூ.11.37 கோடியினை சிறப்பு சேவைகளின் மூலம் ஈட்டியுள்ளது.

**மலை வழித்தடம்:** இக்கழகத்தின் மூலமாக 29 மலை வழித்தடங்களில் கீழ்கண்ட பகுதிகளில் உள்ள மலைவாழ் மக்கள் மற்றும் மலைப்பாங்கான தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக இயக்கப்பட்டு வருகின்றன. விழுப்புரம் மண்டலத்தில் 10 பேருந்துகள் அதாவது கல்வராயன், சேராப்பட்டு மற்றும் வெள்ளிமலை மலைப்பகுதியிலும், திருவண்ணாமலை மண்டலத்தில் 3 பேருந்துகள் ஜமுனாமரத்தூர் மலைப்பகுதியிலும், வேலூர் மண்டலத்தில் 16 பேருந்துகள் புதூர்நாடு, ஏலகிரி, வெலத்திகாமணிபென்டா, அரவட்லா, ஜமுனாமரத்தூர், பாலமதி, செங்காநத்தம் மலைப்பகுதிகளுக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

**பயணிகளுக்கு வழங்கும் கூடுதல் வசதிகள்:** இக்கழகம், பயணிகளின் நலனுக்காக கீழ்கண்ட வசதிகளை செய்து வருகிறது:

i. சாதாரண, விரைவு, சொகுசு பேருந்துகள் பொது மக்களால் எளிதில் அடையாளம் காணப்படும் வகையில் பேருந்துகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ii. **நடத்துநர் இன்றி இயக்கப்படும் இடைநில்லா பேருந்து:** தொலைதூர மற்றும் நேரிடை பயணிகளின் வசதியினை கருத்திற் கொண்டு நடத்துநர் இல்லா மற்றும் இடைநில்லா பேருந்துகளாக 30 பேருந்துகள் அதாவது விழுப்புரம், காஞ்சிபுரம், புதுச்சேரி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் ஆரணி ஆகிய 6 வழித்தடங்களில் இயக்கி வருகிறது. தொடக்கத்தில் இயக்கப்பட்ட 30 எண்ணிக்கையிலான பேருந்துகளுக்கு கிடைக்கப் பெற்ற பொது மக்களின் வரவேற்பினை தொடர்ந்து இந்த எண்ணிக்கையினை 67 பேருந்துகளாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம், ஒரு பேருந்துக்கு நாள் ஒன்றுக்கு நிர்வாக செலவின சேமிப்பு ரூ.3,450/–, ஒரு பேருந்துக்கு மாதம் ஒன்றின் தோராயமான இலாபம் ரூ.1.04 இலட்சங்கள், 67 பேருந்துகளுக்கு ஒரு மாதத்தின் தோராய இலாபம் ரூ.69.35 இலட்சங்கள்,

ஒரு ஆண்டுக்கு 67 பேருந்துகள் மூலம் ஏற்படும் இலாபம் ரூ.8.32 கோடிகள் ஆகும்.

iii. **குளிர் சாதன பேருந்து:** இப்போக்குவரத்துக் கழகம் மூலம் புதிய 3 x 2 என்ற இருக்கை வசதியுடன் கூடிய குளிர் சாதன வசதி கொண்ட பேருந்துகள் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு:

| வ. எண் | தடம் | பேருந்து எண்ணிக்கை | ஒரு கி.மீ இயக்க வருவாய் | பேருந்தின் ஒரு நாளைய வருவாய் |
|---|---|---|---|---|
| 1. | திருவண்ணாமலை–சென்னை | 1 | ரூ.50.95 | ரூ.39,476 |
| 2. | வேலூர்–சென்னை | 1 | ரூ.54.35 | ரூ.34,983 |
| | சராசரி | | ரூ.52.65 | |

இதன் மூலம் ஒரு பேருந்தின் ஒரு கி.மீட்டருக்கான லாபமாக ரூ.8.65/– ஈட்டப்பட்டுள்ளது. எனவே குளிர் சாதன பேருந்துகளின் எண்ணிக்கையினை 2–லிருந்து 50 பேருந்துகளாக உயர்த்த திட்டமிடப்பட்டு உள்ளது.

iv. **நைட்ரஜன் காற்று நிரப்பும் வசதி:** உருளிப்பட்டை உழைப்புத் திறனை மேம்படுத்தும் வகையில் விழுப்புரம் மற்றும் கொணவட்டத்தில் தலா 2 வளாகங்களில் நைட்ரஜன் வாயு நிரப்பும் மையம் நிறுவப்பட்டுள்ளது. இதன் விளைவாக 60% உருளிப்பட்டை பஞ்சர்கள் குறைக்கப்பட்டு உள்ளது.

**9.4 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது, சேலம்:** இக்கழகத்தின் போக்குவரத்துச் சேவையை நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் கண்காணித்து மேம்படுத்த, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம், சேலம் நகரை தலைமையிடமாகக் கொண்டு நிர்வாக இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 32 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,497 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,900 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தில் பணியாளர்களின் எண்ணிக்கை 13,221 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின்

பேருந்து கூண்டு கட்டும் பிரிவு நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் சராசரியாக மாதத்திற்கு 10 பேருந்துகள் முறையே கூண்டு கட்டும் கொள்ளளவை கொண்டு செயல்பட்டு வருகின்றன.

**இதர வருவாய்:** இப்போக்குவரத்துக் கழகம் 2018–19–ல் சிப்ப அனுப்புகைச் சேவை (Parcel service) மூலமாக ரூ.47.74 லட்சங்கள் கூடுதல் வருவாய் ஈட்டியுள்ளது. இப்போக்குவரத்துக் கழகம் வழித்தடங்களில் சுகாதாரமான உணவகங்களில் பயணிகளின் வசதிக்காக பேருந்துகளை நிறுத்தியதன் மூலம் கூடுதல் வருவாயாக 2017–18ஆம் ஆண்டில் ரூ.39.23 லட்சம் மற்றும் 2018–19–ல் ரூ.38.35 லட்சம் ஈட்டியுள்ளது. இப்போக்குவரத்துக் கழகம் பேருந்துகளில் வணிக விளம்பரங்கள் மூலமாக கூடுதல் வருவாயாக 2017–18ஆம் ஆண்டில் ரூ.119.82 லட்சம் மற்றும் 2018–19–ல் ரூ.130.87 லட்சம் ஈட்டியுள்ளது. இப்போக்குவரத்துக் கழக இயக்கப் பகுதிகளில் முக்கிய பேருந்து நிலையங்களில் உள்ள 38 மையங்களில் “அம்மா குடிநீர்” திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச கட்டணத்தில் குடிநீர் வழங்கியதில் 2017–18–ஆம் ஆண்டில் 46.41 லட்சம் பேருந்து பயணிகள்

மற்றும் 2018–19ஆம் ஆண்டில் 39.21 லட்சம் பேருந்து பயணிகள் பயன் அடைந்துள்ளனர்.

**வார இறுதி மற்றும் பண்டிகை காலங்களில் புதிய மற்றும் சிறப்பு சேவைகள்:** இப்போக்குவரத்துக் கழகம் ஏற்கனவே இயக்கப்பட்டு வரும் பேருந்துகளை கொண்டு வழித்தட நீட்டிப்பின் மூலமாக 2017–18–ஆம் ஆண்டில் 8 கிராமங்களுக்கு புதிதாக பேருந்து வசதி அளித்து 3,300 மக்கள் பயன்பெறும் வகையிலும், 2018–19ஆம் ஆண்டில் 38 கிராமங்களுக்கு 11,900 மக்கள் பயன்பெறும் வகையிலும் புதிதாக பேருந்து வசதியினை தொடங்கியுள்ளது. இப்போக்குவரத்துக் கழகம், பயணிகளின் வசதிக்காக சுற்றுலாத் தலங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு கீழ்க்கண்ட கூடுதல் சிறப்பு பேருந்து வசதிகளை வழங்கி வருகின்றன.

i. வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய நாட்களில் ஏற்காடுமலை, கொல்லிமலை, ஒகேனக்கல் காவேரி நீர்வீழ்ச்சி மற்றும் மேட்டூர் அணை போன்ற சுற்றுலா தலங்களுக்கு சிறப்புப் பேருந்து வசதிகளை செய்து வருகிறது.

ii. பண்டிகை மற்றும் முக்கிய நாட்களில் மாதேஸ்வரன் மலை, சிவாலயங்கள் அமைந்துள்ள தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளூர் மற்றும் ஆறகலூர் முருகன் கோவில்கள் அமைந்துள்ள காளிப்பட்டி மற்றும் கபிலர்மலை நாமக்கல் ஆஞ்சநேயர் கோவில் ஆகிய வழிப்பாட்டுத் தலங்களுக்கு சிறப்புப் பேருந்து வசதிகளை செய்து வருகிறது.

iii. இப்போக்குவரத்துக் கழகம் மூலம் 30 நடத்துநர் இல்லா பேருந்துகள் சேலம் – கோவை மற்றும் சேலம் – பெங்களூரு வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன.

iv. இப்போக்குவரத்துக் கழகம் மூலம் ஏற்காடு மலை, கொல்லிமலை, கல்வராயன்மலை மற்றும் நல்லமதிமலை (பச்சமலை) ஆகிய பகுதிகளுக்கு 25 பேருந்துகளைக் கொண்டு போதிய பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தினசரி 14,190 மலைவாழ் பகுதி பொதுமக்கள் மற்றும் 796 பள்ளி மாணவ, மாணவியர் பயனடைகின்றனர்.

v. இப்போக்குவரத்துக் கழகத்தால் சிற்றுந்து மூலம் புதிதாக தேன்கனிக்கோட்டை வனப்பகுதியில் அமைந்துள்ள "தொட்டமஞ்சி" கிராமத்திற்கும், கல்வராயன்மலையில் அமைந்துள்ள மன்னூர் மற்றும் சேம்பூர் கிராமத்திற்கும், ஏற்காடு மலையில் அமைந்துள்ள குண்டூர் மற்றும் மஞ்சக்குட்டை கிராமத்திற்கும் போக்குவரத்து வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதன் மூலம் தினசரி இவ்வனப்பகுதியில் உள்ள 1,450 மலைவாழ் மக்கள் பயன் அடைந்து வருகின்றனர்.

**9.5 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) வரையறுக்கப்பட்டது, கோயம்புத்தூர்:** இப்போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இக்கழகம், கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள முக்கிய மாவட்டங்களான நீலகிரி, ஈரோடு, சேலம், வால்பாறை மலைப்பகுதி மற்றும் அருகிலுள்ள கேரளா, கர்நாடகா மாநிலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம் 45 பணிமனைகள், எட்டு கோட்ட அலுவலகங்கள் மற்றும் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் உதகமண்டலம்

ஆகிய இடங்களில் நான்கு மண்டல அலுவலகங்களை உள்ளடக்கியதாகும். இக்கழகத்தில், வர்ணம் பூசுதல் பிரிவுகள், உருளிப்பட்டை புதுப்பித்தல் பிரிவுகள், பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவுகள், தகுதிச் சான்றிதழ் புதுப்பிக்கும் பிரிவுகள் மற்றும் கூண்டு கட்டுமானப் பிரிவுகள் உள்ளன. இப்போக்குவரத்துக் கழகம் நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிப் பேருந்துகளை இயக்கி வருகிறது. 31.03.2019 அன்றுள்ளவாறு இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 3,158 மற்றும் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 17,709. இக்கழகத்தில் பணிபுரியும் நடத்துநர், ஓட்டுநர், பணிமனைத் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு தேவையான பயிற்சி அளித்து வேலைத் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1978ல் பொள்ளாச்சியில் பயிற்சி நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் பவானிசாகரிலும் பயிற்சி நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சி பயிற்சி நிலைய வளாகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட ஓட்டுநர்களுக்கும், நிரந்தர ஓட்டுநர்களுக்கும் தங்களது பேருந்து ஓட்டும் திறனை மேம்படுத்திக்கொள்ள ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவிக்கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதுவரை 6,564 ஓட்டுநர்களுக்கு

பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்போக்குவரத்துக் கழகம் பயணிகள் போக்குவரத்துடன் பொது மக்களுக்கு பின்வரும் சேவைகளையும் செய்து வருகிறது.

i. இக்கழகம் வால்பாறை, மருதமலை, உதகமண்டலம் மற்றும் கூடலூரில் பேருந்து நிலையங்களை அமைத்து பராமரித்து வருகிறது.

ii. பயணிகளின் வசதிக்காக இக்கழகம் பர்லியார் மற்றும் ஆசனூரில் சாலையோர சிற்றுண்டி விடுதிகளை பராமரித்து வருகிறது.

iii. இக்கழகம் பயணிகளின் வசதிக்காக பந்தல்கள், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளை முக்கியமான விழாக்காலங்களில் அமைத்துத் தருகிறது.

iv. மற்ற போக்குவரத்துக் கழகங்களைப் போலவே, மாணவர்களுக்கு பேருந்து இலவச பயணச் சீட்டு (100% இலவச பயணம் +2 வரையிலும் அதற்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு 50% சலுகைக் கட்டண பயணச் சீட்டும் மற்றும் 1/3 சலுகைக் கட்டண பயணச்

சீட்டு மாணவர்கள் அல்லாதோருக்கு) ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

v. இதனுடன், சுதந்திர போராட்ட தியாகிகள், மாற்றுத் திறனாளிகள், மொழிப் பேராட்ட வீரர்கள், பத்திரிக்கை நிருபர்கள் ஆகியோருக்கும் இலவச பயண அனுமதி சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற நாடக நிறுவனங்களுக்கும் சலுகைக் கட்டண பயணச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**9.6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) வரையறுக்கப்பட்டது, கும்பகோணம்:** இப்போக்குவரத்துக் கழகம், கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்துச் சேவையைக் கண்காணிக்க கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, காரைக்குடி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பணிமனைகளின்

எண்ணிக்கை 60 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 3,601. இப்போக்குவரத்துக் கழகம் 3,587 வரையறுக்கப்பட்ட சேவைகளை 3,648 வழித்தடங்களில் இயக்கி வருகிறது. இக்கழகத்தில் உள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 21,985 ஆகும். இதர போக்குவரத்துக் கழகங்களைப் போல இப்போக்குவரத்துக் கழகமும் சாதாரண, விரைவு மற்றும் சொகுசு பேருந்துகளை இயக்கி வருகின்றது. இப்போக்குவரத்துக் கழகத்தின் கூண்டு கட்டும் பிரிவுகள் பொறையார், கரூர் (மண்மங்கலம்), காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும், உதிரி பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவு மற்றும் உருளிப்பட்டை புதுப்பிக்கும் பிரிவுகள் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, தேவகோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இயங்கி வருகின்றன.

**9.7 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) வரையறுக்கப்பட்டது, மதுரை:** இதர போக்குவரத்துக் கழகத்தைப் போல, இப்போக்குவரத்துக் கழகமும், நிர்வாக இயக்குநரின் தலைமையில் மதுரை மாநகரை தலைமையிடமாகக் கொண்டு மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களுடன்

செயல்பட்டு நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் பேருந்து சேவையை இயக்கி வருகின்றது. இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 39 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,262 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,166 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 14,819 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு மற்றும் இதரப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.

**9.8 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) வரையறுக்கப்பட்டது, திருநெல்வேலி:** இப்போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி நகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம், போக்குவரத்து சேவையை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் கண்காணித்து மேம்படுத்த, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 30 ஆகும்.

இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,775 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,654 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 11,287 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு, அதிநவீன, மற்றும் அதிசொகுசு போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது. திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.

**பயணிகளுக்கான கூடுதல் வசதிகள்:** இப்போக்குவரத்துக் கழகத்தால் திருச்செந்தூர், சங்கரன்கோவில், திருவில்லிபுத்தூர், உவரி, கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் போன்ற முக்கிய சுற்றுலா தலம் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அம்மா குடிநீர் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் 18 பேருந்து நிலையங்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விற்பனை நிலையங்களும் மற்றும் இப்போக்குவரத்துக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கன்னியாகுமரி பேருந்து நிலையத்தில் குழந்தைகளுக்கு தாய்பால் ஊட்டுவதற்கு தனி

அறை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகத்தால் இரண்டு இரவு நேர பேருந்துகள் திருநெல்வேலி நகரத்திலும் மற்றும் ஒரு இரவு நேர பேருந்து நாகர்கோவில் நகரத்திலும் இயக்கப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் மண்டலத்தின் **24** பேருந்துகள் மூலம் **53** நடைகள் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கென இயக்கப்பட்டு வருகின்றன.

## அத்தியாயம்–10

## தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

**10.1** தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் 25.03.1975 அன்று தொடங்கப்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான மூலதனம் மற்றும் நடைமுறை மூலதன நிதியுதவியை பொது மக்களிடமிருந்து வைப்பீடுகள் பெறுவதன் மூலம் பூர்த்தி செய்து அரசின் நிதி ஒதுக்கீட்டை சார்ந்திருக்காமல் இருக்கும் பொருட்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**10.2 நிதிச் செயல்பாடு:** தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட 1975–ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம் கடந்த எட்டு ஆண்டுகளாக ஈட்டிய இலாபம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வட்டி தள்ளுபடிக்கு முந்தைய இலாபம் | வட்டி தள்ளுபடி செய்தது | வட்டி தள்ளுபடிக்கு பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் இலாபம் | வருமான வரி | வருமான வரிக்குப் பிந்தைய இலாபம் |
|---|---|---|---|---|---|
| 2013–2014 | 3,444.00 | 2,703.00 | 741.00 | 240.45 | 500.55 |
| 2014–2015 | 3,294.25 | 2,509.00 | 785.25 | 269.69 | 530.48 |
| 2015–2016 | 5,283.29 | 4,648.68 | 634.61 | 212.95 | 423.36 |
| 2016–2017 | 7,322.42 | 6,469.00 | 853.42 | 282.17 | 571.25 |
| 2017–2018 | 7,996.71 | 6,964.50 | 1,032.21 | 357.23 | 674.98 |
| 2018–2019 (திருத்திய மதிப்பீடு) | 10,018.69 | 8,865.00 | 1,153.69 | 403.15 | 750.54 |
| 2019–2020 (செலவு திட்ட மதிப்பீடு | 11,247.85 | 9,800.00 | 1,447.85 | 505.94 | 941.91 |

**10.3 வைப்பீடுகள்:** இந்நிறுவனம் பொது மக்களிடம் முதலீட்டிற்கு ஏற்ற நிறுவனம் என்ற நம்பகத்தன்மையைத் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. **31.03.2019** அன்றுள்ளபடி இந்நிறுவனத்தில் செய்துள்ள மொத்த வைப்புத்தொகை ரூபாய் **5016.48** கோடியாகும்.

**10.4 வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள்:** வைப்பீடுகளுக்கான வட்டி வீதம் சந்தை நிலவரத்திற்கேற்பவும், போக்குவரத்து கழகங்களின் நிதித் தேவை மற்றும் கடனை திருப்பிச் செலுத்தும் தன்மைக்கேற்ப வழங்கப்படுகின்றது. இதர அரசு நிதி நிறுவனங்களின் வட்டி வீதங்களுக்கு இணையாக இந்நிறுவனம் வட்டி வீதத்தை ஏற்றி அல்லது இறக்கி மாற்றி அமைத்து வருகிறது. தற்போதைய வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| காலம் | வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் (கூட்டு வட்டி மாதாந்திர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) 16.05.2018 முதல் | |
|---|---|---|
| | **பொதுமக்கள்** | **மூத்த குடிமக்கள்** |
| 12 மாதங்கள் | 7.50% | 7.75% |
| 24 மாதங்கள் | 7.75% | 8.00% |
| 36 மாதத்தில் இருந்து 60 மாதங்கள் வரை | 8.25% | 8.75% |

**10.5 வைப்பீட்டுத் திட்டங்கள்:** தற்போது கீழ்க்கண்ட இரு வைப்பீட்டுத் திட்டங்கள் உள்ளன.

| | **திட்டம் 1** | **திட்டம் 2** |
|---|---|---|
| | **குறித்த காலம்தோறும் வட்டி வழங்கும் திட்டம்** | **பணப்பெருக்குத் திட்டம்** |
| குறைந்தபட்ச வைப்பீடு | ரூ.10,000/– | ரூ.10,000/– |
| காலம் (மாதங்களில்) | 24, 36, 48 மற்றும் 60 | 12, 24, 36, 48 மற்றும் 60. |
| வழங்கும் வட்டி வீதம் | 24 மாதங்கள் – காலாண்டு, 36 – 60 மாதங்கள் – மாதம், காலாண்டு மற்றும் ஆண்டு வட்டி. | முதிர்வுறும்போது (கூட்டு வட்டி மாதாந்திர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) |

**10.6 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட வைப்பீடுகள்:** இத்திட்டம் தமிழக அரசால் சமூக நலத்துறையின் மூலம் வழங்கப்படும் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமாகும். **31.03.2019** அன்றுள்ளவாறு இத்திட்டத்தின்கீழ் **97,785** வைப்பீடுதாரர்களின் மூலம் பெறப்பட்ட வைப்பீடு ரூ.14.82 கோடியாகும்.

**10.7 நிறுவனத்தின் நிதி நிலை:** 31.03.2019 அன்றுள்ளவாறு தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மொத்த நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| பங்கு மூலதனம்<br>அ) அரசு (பங்கு முன்பணத் தொகை ரூ.712.54 கோடி உட்பட)<br>ஆ) அரசு போக்குவரத்து கழகங்களின் பங்குத்தொகை | 755.57<br>18.71<br>―――――― | 774.28 |
| மிகுதித் தொகை மற்றும் ஒதுக்கீடு | | 126.30 |
| வைப்பீடுகள் | | 5,016.48 |
| **மொத்தம்** | | **5,917.06** |

**10.8 கடன்கள் :** 2018–2019ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளிக்கப்பட்ட கடன் உதவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடியில்)

| வ.எண். | கடன்கள் | தொகை |
|---|---|---|
| 1. | தவணைக் கொள்முதல் கடன்கள் | 126.03 |
| 2. | குறுகிய கால கடன் மோட்டார் வாகன அரையாண்டு வரி செலுத்துவதற்காக மற்றும் இதர கடன்களுக்காக கொடுக்கப்பட்டது. | 1,021.42 |
| 3. | பருவக்கடன்கள் நடைமுறை மூலதனத்திற்காக வழங்கியது. | 2,471.00 |
| | **மொத்தம்** | **3,618.45** |

இந்நிறுவனத்தின் குறுகிய கால கடன் உதவியினால் அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் அரையாண்டிற்கான மோட்டார் வாகன வரியை மொத்தமாக செலுத்தியதால் வாகன வரியில் நான்கு சதவீதம் தள்ளுபடி பெற்று போக்குவரத்துக் கழகங்களின் செலவினைக் குறைக்க உதவியது. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளித்த கடனுதவி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | நிதியுதவிகள் |
|---|---|
| 2012–2013 | 1,306.23 |
| 2013–2014 | 1,652.48 |
| 2014–2015 | 2,151.24 |
| 2015–2016 | 2,776.33 |
| 2016–2017 | 3,574.32 |
| 2017–2018 | 3,757.58 |
| 2018–2019 | 3,618.45 |

**10.9 புதிய கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டி வீதம் :** இந்நிறுவனம் அனைத்து போக்குவரத்து கழகங்களுக்கும் வழங்கிய புதிய கடன்களுக்கான வட்டி வீதம் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | கடன்கள் | வட்டி வீதம் | நாளன்றுள்ளவாறு |
|---|---|---|---|
| 1. | தவணைக் கொள்முதல் கடன்கள் | 9.75% | 01.01.2018 |
| 2. | குறித்த காலக் கடன்கள் | 10.00% | 01.04.2017 |
| 3. | குறுகிய கால கடன்கள் (சம்பளம்) | 10.25% | |

அரசு, இந்நிறுவனத்திற்கு வழங்கிய பங்கு மூலதனமாக **ரூ.712.54** கோடியை போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகள் வாங்கும் பொருட்டு ஒதுக்கப்பட்டது, அதில் **ரூ.600** கோடியை தவணைக் கொள்முதல் கடனாக **2%** சிறப்பு வட்டி வீதத்தில் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**10.10 2019–20–ம் ஆண்டின் திட்டங்கள்:** 2019–2020–ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் போக்குவரத்துக் கழகங்களுக்கு **1,903** புதிய பேருந்துகள் வாங்க **ரூ.668.69** கோடி நிதியுதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, மோட்டார் வாகன வரி, ஊக்கத்தொகை மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவற்றிற்கு **ரூ.1,650.00** கோடி நிதியுதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–11

## பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு

**11.1** பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு, 1984–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் போக்குவரத்துத் துறையின் சாலை போக்குவரத்து வளர்ச்சிக்கான ஆலோசனைகளை அளிக்கும் நோக்கத்துடன் ரூ.50 லட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன், ரூ.10 லட்சம் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது. இக்கழகம் தொடங்கிய காலத்தில் இருந்து தன்செயல்பாடுகளை பல்வேறு துறைகளுக்கும் விரிவுபடுத்தி தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் தயாரிப்பு, ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல், போக்குவரத்துப் பணி, அறிவார்ந்த போக்குவரத்து முறைகள் ஆகிய பல்வேறு துறைகளில் தனது ஆலோசனை சேவைகளை அளித்துள்ளது.

**11.2 எதிர்கால வாய்ப்புகள்:** தென்னிந்திய தானியங்கி வாகன இயக்குனர்கள் சங்கத்தின் வியாபார செயல்பாடுகளை மென்பொருள் மூலம் கனினி மயமாக்குதல், தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்தின் பணிகளை ஆன்லைன் மூலம்

கண்காணித்தல், தமிழ்நாடு தொல்லியல் துறைக்கு நுண்படக் கருவி வாங்குதல், தமிழ்நாடு ஆவணக் காப்பகத் துறையின் நூலகத் தகவல் முறைமை மென்பொருளை பராமரித்தல் ஆகியவை பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் எதிர்கால திட்டப் பணிகளாகும். மேலும் இந்நிறுவனத்தின் பணிகளை சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்கு மாற்றம் செய்வதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–12

## சாலை போக்குவரத்து நிறுவனம்

**12.1** சாலை போக்குவரத்து நிறுவனம், 1860–ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 1976–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் சாலை போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டு பணிகள், சாலை விபத்து ஆய்வு மற்றும் ஆராய்ச்சி பணிகள், பேருந்து தரம் மற்றும் பேருந்து மேலாண்மை, அரசு போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரத்தினை பரிசோதித்தல், மற்றும் போக்குவரத்துக் கழக அலுவலர்கள் / பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**12.2 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி:** சாலை போக்குவரத்து நிறுவனம், தற்போது கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களை கும்மிடிபூண்டி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து 15 இடங்களிலும் பயிற்சி அளித்து வருகிறது. 17 பயிற்சி மையங்களில் 2018–19–ஆம் ஆண்டு வரை மொத்தம் 60,361 நபர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர்

பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சாலை போக்குவரத்து நிறுவனம் இலகுரக ஓட்டுநர் பயிற்சிகளை சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் அளித்து வருகின்றது.

**12.3 திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்:** போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, சாலை போக்குவரத்து நிறுவனம் மற்றும் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகங்களிலும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. 2018–19 வரை நடைபெற்ற 1,906 பயிற்சிகளின் மூலம் மொத்தம் 40,435 போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**12.4 நிர்வாகிகளுக்கான தேர்வுகள்:** போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

**12.5 உபகரணங்கள் பரிசோதனைக்கூடம்:** சாலைப் போக்குவரத்து நிறுவனத்திலுள்ள உபகரணங்கள் பரிசோதனைக் கூடத்தில் 54 மோட்டார் வாகன உதிரிபாகங்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இந்த பரிசோதனைக் கூடத்தில் 5,881 மாதிரிக் கூறுகள் (samples) இதுவரை பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

**12.6 சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவு:** சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு இதுவரை 526 ஆராய்ச்சி அறிக்கைகள், 30 ஆலோசனை அறிக்கைகள் வெளியிட்டுள்ளது. மேலும், விபத்து ஆராய்ச்சி கையேடு மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து விசாரணை நடத்துவதற்கான வழிகாட்டியினை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனம், அரசு போக்குவரத்துக் கழகங்கள் பயன்பெறும் வகையில் தொழில்நுட்ப கையேட்டினை வெளியிட்டுள்ளது.

**12.7 கொள்முதலில் ஒருங்கிணைப்பு முகமை:** அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள், பேருந்து கூண்டு

கட்டுதல், பயணச்சீட்டு அச்சிடுதல், டயர் புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள், மசகு எண்ணெய் (லூப்ரிகன்ட்ஸ்) மற்றும் அம்மா குடிநீர் தயாரிப்பதற்கான மூல பொருட்கள் ஆகியவைகளை வாங்குவதில் சாலை போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

### 12.8 கல்வி நிறுவனங்கள்:

i. **பொறியியல் கல்லூரி:** போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சி பணிகளுக்காகவும், போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுதாரர்களின் நலனுக்காகவும், 1984–ஆம் ஆண்டில் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி இந்நிறுவனத்தால் ஈரோடு மாவட்டம் சித்தோட்டில் துவக்கப்பட்டது. இக்கல்லூரியில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் ஆண்டு தோறும் 468 மாணாக்கர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இக்கல்லூரியில் இதுவரை 9,340 மாணாக்கர்கள் இளநிலை பொறியியலிலும் (பி.இ), 209 மாணாக்கர்கள் முதுகலை (கட்டடவியல்) பொறியியலிலும் (எம்.இ), 18 மாணாக்கர்கள் முதுகலை (வெப்பவியல்) பொறியியலிலும், 32 மாணாக்கர்கள்

முதுகலை (கணினி) அறிவியலிலும், 945 மாணாக்கர்கள் முதுகலை கணினி பயன்பாட்டியலில் முதுகலை (எம்.சி.ஏ) பட்டங்களும் பெற்றுள்ளனர். இப்பொறியியல் கல்லூரி, மாநிலத்திலுள்ள முதல்தர கல்லூரிகளில் ஒன்றாகும்.

ii. **மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை:** அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுகளின் நலனுக்காக பெருந்துறை மருத்துவக் கல்லூரி 1986 முதல் ஆண்டொன்றுக்கு 60 மாணவர்களுடன் மருத்துவ பட்டப்படிப்பிற்காக செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கை 2017–18–ஆம் ஆண்டில் 100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது, இக்கல்லூரி அரசாணை (நிலை) எண்.308, போக்குவரத்து (பி1) துறை, நாள் 24.10.2018–இன் மூலம் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

iii. **செவிலியர் பள்ளி:** இந்நிறுவன மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செவிலியர் பட்டயப் படிப்பு 2008–09–ஆம் கல்வியாண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 20 மாணவியர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். தற்போது

2018–19–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 60 மாணவியர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

iv. **தொழில்நுட்பக் கல்லூரிகள்:** சாலை போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் மூன்று தொழில்நுட்ப பயிலக கல்லூரிகள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் (கிருஷ்ணகிரி) மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992–93–ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன. தற்போது, இம்மூன்று தொழில்நுட்ப கல்லூரிகளிலும் ஆண்டுதோறும் மொத்தம் 700 மாணவர்கள் பட்டய பொறியாளர் படிப்பில் அனுமதிக்கப்படுகிறார்கள். இம்மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சேர்ந்து 2018 வரை 9,741 மாணவர்கள் பட்டயங்கள் பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தால் நடத்தப்படும் கல்லூரிகளில் அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் தற்போது நிரப்பப்படும் இடங்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பிரிவுகள் | மொத்த இடங்கள் | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் | நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | பெருந்துறை மருத்துவக் கல்லூரி – மருத்துவ பட்டப்படிப்பு | 100* (100–15=85) | 55 (65%) | 30 (35%) |
| 2. | சா.போ.நி. செவிலியர் பட்டயப் பள்ளி | 60 | 39 (65%) | 21 (35%) |

| வ. எண் | பிரிவுகள் | மொத்த இடங்கள் | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் | நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் |
|---|---|---|---|---|
| 3. | பொறியியல் கல்லூரி | | | |
| | (அ) இளங்கலை பொறியியல் பட்டப் பிரிவு | 420 | 273 (65%) | 147 (35%) |
| | (ஆ) முதுகலைப் பட்டம் கட்டடவியல் | 24 | 17 (72%) | 7 (28%) |
| | (இ) கணினி பொறியியல் | 24 | 17 (72%) | 7 (28%) |
| 4. | தொழில்நுட்ப பயிலகங்கள் | 700 | 350 (50%) | 350 (50%) |

*அகில இந்திய ஒதுக்கீடான **15** இடங்கள் உட்பட (அதாவது **15 + 85 = 100**)

சாலை போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கல்வி நிறுவனங்களுக்கான மூலதனச் செலவினங்களை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக் கொள்கின்றன. சாலை போக்குவரத்து நிறுவனம், அரசாணை (நிலை) எண்.6, போக்குவரத்து (அ) துறை, நாள் **08.01.2013**-இன்படி போக்குவரத்துக் கழகங்களுக்கு கொள்முதல் செய்யப்படும் பொருட்களை வழங்குபவர்களிடமிருந்து சிறப்பு நிர்வாக தள்ளுபடி மூலம் செலவினங்களை ஈடு செய்கின்றன. **07.03.2019** அன்று நடைபெற்ற நிர்வாக குழுக் கூட்டத்தில் தள்ளுபடி சதவீதத்தை அரசின் ஒப்புதலுக்குட்பட்டு **0.5%** அதிகரிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசின் ஒப்புதலுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்களின்

அன்றாட செலவினங்களை இதர ஆதாரங்கள் மற்றும் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் வட்டியில்லா கடன் தொகை வைப்புநிதியிலிருந்து வரும் வட்டி வருமானம், கல்விக் கட்டணம், மருத்துவமனை வருமானம் ஆகியவற்றின் மூலம் ஈடு செய்யப்படுகிறது. தற்போது, சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள், அந்நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் செலவிடப்பட்டு வரும் ரூ.10 கோடி மூலதன செலவினங்களைத் தவிர மொத்த பற்றாக்குறை ரூ.147.75 கோடியுடன் இயங்கி வருகின்றன. இந்த நிறுவனங்களை பிரதானமாகக் காணும் நோக்கில், இந்த நிறுவனங்கள் பிற அரசு நடத்தும் நிறுவன முயற்சிகளுடன், போக்குவரத்துக் கழக ஊழியர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளின் தற்போதைய சலுகைகளுக்கு குந்தகமின்றி அவற்றை அரசுக்கு ஒப்படைப்பதை ஆராய முயற்சிக்கப்படுகின்றன. தற்போது சாலை போக்குவரத்து நிறுவன பெருந்துறை மருத்துவக்கல்லூரி அரசாணை (நிலை) எண். 308, போக்குவரத்து (பி1) துறை, நாள் 24.10.2018–இன் மூலமாக அரசு சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை எடுத்து

நடத்திட அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி மற்றும் குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்தின் பல்தொழில்நுட்ப பயிலகங்களுக்கான நிதியும் முற்றிலும் செலவழிந்துவிட்டதால் அவற்றையும் அரசு கல்வி நிறுவனங்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாலை போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கல்வி நிறுவனங்களில் 679 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

## அத்தியாயம்–13

## சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவு

**13.1 சாலை போக்குவரத்து இதழ்:** சாலை போக்குவரத்து நிறுவனம் சாலை போக்குவரத்து, சாலை பாதுகாப்பு, விபத்து ஆய்வு மற்றும் மின்னணு பயணச்சீட்டு முறை போன்ற தகவல்களை உள்ளடக்கிய “Journal of Road Transport” என்கிற காலாண்டு இதழை வெளியிடுகின்றது.

**13.2 உதிரி பாகங்கள் பரிசோதனை மற்றும் தரம் கண்காணித்தல்:** அகில இந்திய சாலை போக்குவரத்துக் கழகம் (ASRTU) மற்றும் இந்திய தரக்காப்பீட்டு நிறுவனம் (BIS) நிர்ணயித்த குறியீடுகளின்படி பேருந்தில் பயன்படுத்தப்படும் 54 வகையான உதிரி பாகங்களை பரிசோதனை செய்வதற்கான உபகரணங்கள் இந்நிறுவனத்தில் உள்ள பரிசோதனைக் கூடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பரிசோதனைக் கூடத்தில் 2018–19 வரை 5,881 மாதிரிக் கூறுகள் (samples) போக்குவரத்துக் கழகத்திலிருந்து பெறப்பட்டு அதன் விவரம் அகில இந்திய சாலை போக்குவரத்துக் கழக விதிகளின்படி போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**13.3 போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பதவி உயர்வுக்கான தேர்வு:** அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு அளிப்பதற்கான துறைத் தேர்வு இன்றியமையாததாகும். 2018–19–ஆம் ஆண்டிற்கான தேர்வு ஜூன் 2018–ல் இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இத்தேர்வுகளில் கலந்து கொண்டோர் மற்றும் தேர்ச்சி பெற்றோர் விபரம் பின்வருமாறு:

| **வ. எண்** | **தேர்வு விவரம்** | **தேர்வில் பங்கேற்றவர்** | **தேர்ச்சி–யடைந்தோர்** | **சதவீதம்** |
|---|---|---|---|---|
| 1. | நிர்வாக பதவிக்கான தேர்வு | 173 | 167 | 96.53 % |
| 2. | நிர்வாகமற்ற பதவிகளுக்கான தேர்வு | 441 | 404 | 91.61 % |
| | **மொத்தம்** | **614** | **571** | **93.00 %** |

**13.4 போக்குவரத்து மைய கொள்முதல் பிரிவு:** அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள் (Chassis), பேருந்து கூண்டு கட்டுதல் (Bus Body Building), முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள் (Fully Built Buses), உருளிப்பட்டைகள் (Tyres), பயணச்சீட்டு அச்சிடல் (Printing

of Tickets), உருளிப்பட்டை புதுப்பிக்கும் பொருட்கள் (R.T. Materials), மசகு எண்ணெய் (Lubricants) மற்றும் அம்மா குடிநீர் பாட்டில்கள் தயாரிப்பு மூலப்பொருட்கள் ஆகியவற்றின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய, சாலை போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகின்றது. மேலும், ஏற்கனவே செயல்பட்டு வந்த ஒப்பந்தப் புள்ளி முடிவு செய்யும் உயர்மட்டக் குழு அரசாணை (நிலை) எண்.54, நாள் 21.04.2000-இன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது. மேற்படி, ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவானது 2018–19–ஆம் ஆண்டில் 8 முறை கூட்டம் நடத்தி மாணவர்களுக்கான இலவச பயண அட்டை, உருளிப்பட்டை புதுப்பிக்கும் பொருட்கள் (R.T. Materials), மசகு எண்ணெய் (Lubricants) உருளிப்பட்டைகள் (Tyres), பயணச்சீட்டு அச்சிடல் (Printing of Tickets), அடிச்சட்டங்களுக்கான திருத்தம் மற்றும் அம்மா குடிநீர் பாட்டில்கள் போன்றவற்றுக்கான விலையை இறுதி செய்தது.

# அத்தியாயம்–14

## பயிற்சி

**14.1 சாலை போக்குவரத்து நிறுவனத்தின் மேலாளர் மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டம்:** போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கென பல்வேறு பயிற்சிகள் சிறந்த முறையில் நடத்திட ஆண்டுதோறும் கால அட்டவணை சாலை போக்குவரத்து நிறுவனத்தால் தயாரித்து போக்குவரத்துக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டு அதனடிப்படையில் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகங்கள் மற்றும் சாலை போக்குவரத்து நிறுவனம் ஆகிய இடங்களில் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. பல்வேறு பயிற்சிகளில் கலந்து கொண்டு பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | விவரம் | பயிற்சி வகுப்புகள் எண்ணிக்கை | | | கலந்து கொண்ட நபர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2017–18 வரை | 2018–19 | மொத்தம் | 2017–18 வரை | 2018–19 | மொத்தம் |
| 1. | போக்குவரத்து கழக அலுவலகங்களில் நடத்தப்பட்ட பயிற்சிகள். | 412 | 0 | 412 | 12,498 | 0 | 12,498 |

| வ. எண். | விவரம் | பயிற்சி வகுப்புகள் எண்ணிக்கை | | | கலந்து கொண்டநபர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2017–18 வரை | 2018–19 | மொத்தம் | 2017–18 வரை | 2018–19 | மொத்தம் |
| 2. | சாலை போக்குவரத்து நிறுவனம், தரமணி மற்றும் கிளை நிறுவனங்களில் நடத்தப்பட்ட பயிற்சிகள். | 962 | 37 | 999 | 17,335 | 568 | 17,903 |
| 3. | கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் இதர பயிற்சிகள். | 489 | 6 | 495 | 9,862 | 172 | 10,034 |
| மொத்தம் | | 1,863 | 43 | 1,906 | 39,695 | 740 | 40,435 |

30 பணியாளர்கள் தரமணி தலைமை அலுவலகத்தில் பணி புரிந்து வருகின்றனர். அவர்களில், ஐந்து அலுவலர்கள் அயற்பணி முறையில் பணி புரிந்து வருகின்றனர்.

## ஓட்டுநர் பயிற்சி மையம்

### 14.2 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம், கும்மிடிபூண்டி:

கும்மிடிபூண்டி ஓட்டுநர் பயிற்சி மையத்தில் 12 வார கால கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி விஞ்ஞான முறைப்படி அளிக்கப்பட்டு வருகிறது. அப்பயிற்சியில் சேருவதற்கான குறைந்த பட்ச தகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. குறைந்தபட்ச கல்வி தகுதி : எட்டாம் வகுப்பு தேர்வு பெற்றிருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 2. ஓட்டுநர் உரிமம் | : | இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் பயணிகள் வாகன ஓட்டுநர் வில்லை |
| 3. முன் அனுபவம் | : | குறைந்தபட்சம் ஒரு வருடம் இலகுரக வாகனம் இயக்கியிருத்தல் |
| 4. வயது | : | 20 வயதுக்கு குறையாமல் |
| 5. உயரம் | : | குறைந்த பட்சம் 159.5 செ.மீ. |
| 6. எடை | : | குறைந்த பட்சம் 50 கி.கி |

கும்மிடிப்பூண்டி ஓட்டுநர் பயிற்சிப் பிரிவில் காலாண்டிற்கு 150 மாணவர்கள் வீதம் ஆண்டுதோறும் சுமார் 600 மாணவர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்கு தேவையான மாணவர்களை தேர்ந்தெடுக்க செய்தித்தாள்களின் விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு மேற்கண்ட தகுதிகளுடைய விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுகின்றனர். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் பரிந்துரை செய்யப்படும் நபர்களுக்கும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகின்றது. 12 வார கால பயிற்சி

காலத்தில் பயிற்சி மாணவர்களுக்கு வாகனம் ஓட்டுதலில் பயிற்சி, வகுப்பறைப் பாடம் மற்றும் வாகன பராமரிப்பு செய்முறை பயிற்சி ஆகியவை தினந்தோறும் அளிக்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் மாணவர்களுக்கு ஓட்டுநர் கல்வி, வாகனவியல், போக்குவரத்து கல்வி, நடத்துநர் கல்வி மற்றும் பொது மக்கள் தொடர்பு ஆகிய பாடங்களில் எழுத்துத் தேர்வு **400** மதிப்பெண்கள், ஓட்டுநர் பயிற்சி தேர்வு **300** மதிப்பெண்கள் ஆக மொத்தம் **700** மதிப்பெண்களுக்கு தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இத்தேர்வுகள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவோர் சென்னை, ரெட்ஹில்சில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற அறிவுறுத்தப்படுவர். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தேர்ச்சி சான்றிதழும் வழங்கப்படுகிறது. இந்நிறுவனம், போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள், பொதுத் துறை நிறுவனம் மற்றும் தனியார் துறை நிறுவன ஓட்டுநர்கள் பயன்பெறும் வகையில் தற்காப்பாக வாகனம் ஓட்டுதல் பயிற்சி, ஆபத்தான பொருட்களை ஏற்றிச் செல்லும் ஓட்டுநர்களுக்கான சிறப்பு பயிற்சி, சாலைப் பாதுகாப்பு விதிகள், எரிபொருள் சிக்கனம், விபத்துக்குள்ளான ஓட்டுநர்களுக்கான சிறப்பு பாதுகாப்பு ஓட்டுநர் பயிற்சி போன்ற பல்வேறு புத்தாக்க மற்றும்

புனர்பயிற்சிகள் ஒரு மாதம், 15 நாட்கள், 5 நாட்கள், 3 நாட்கள், 2 நாட்கள் மற்றும் ஒரு நாள் என்ற அடிப்படையில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, கும்மிடிபூண்டி மற்றும் திருச்சிராப்பள்ளி தவிர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து மதுரை, நாகர்கோவில், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், சேலம், தருமபுரி, ஈரோடு, பொள்ளாச்சி, விழுப்புரம், வேலூர், கும்பகோணம், காரைக்குடி, திருச்சிராப்பள்ளி (விரைவு) மற்றும் புதுக்கோட்டை ஆகிய 15 மையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வோட்டுநர் பயிற்சி பள்ளிகளில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் புனர் பயிற்சி பெற்றோர் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2017–18 வரை | 2018–19 | மொத்தம் |
| 1. | கும்மிடிப்பூண்டி | 22,237 | 398 | 22,635 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 2,305 | 105 | 2,410 |
| 3. | இதர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பயிற்சி மையங்கள். | 33,910 | 1,406 | 35,316 |
| **மொத்தம்** | | **58,452** | **1,909** | **60,361** |
| 4. | புனர் பயிற்சிகள் (கும்மிடிப்பூண்டியில் மட்டும்) | 58,243 | 3,261 | 61,504 |

**14.3 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்:** இரண்டு இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் 1997–98–ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றன. தற்போது, ஈரோட்டில் உள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்திலும் இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி பள்ளிகளில் இதுவரை இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி முடித்தவர்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2017–18 வரை | 2018–19 | மொத்தம் |
| 1. | தரமணி, சென்னை | 2,204 | 325 | 2,529 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 972 | 36 | 1,008 |
| 3. | ஈரோடு | 235 | 86 | 321 |
| மொத்தம் | | 3,411 | 447 | 3,858 |

**14.4 ஒரு நாள் பயிற்சி வகுப்பு:** அரசாணை (நிலை) எண். 697, உள் (போக்குவரத்து–V) துறை, நாள் 05.08.2010–இன்படி கனரக வாகன ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலுக்காக ஒரு நாள் சிறப்பு பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2017–18 வரை | 2018–19 | மொத்தம் |
| 1. | தரமணி, சென்னை | 6,308 | 286 | 6,594 |
| 2. | கும்மிடிப்பூண்டி | 3,329 | 58 | 3,387 |
| 3. | திருச்சிராப்பள்ளி | 23,959 | 477 | 24,436 |
| **மொத்தம்** | | **33,596** | **821** | **34,417** |

சாலை போக்குவரத்து நிறுவனத்தின், தரமணி ஓட்டுநர் பயிற்சி தளத்தை **1,571** நபர்கள் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாண்டில் கும்மிடிப்பூண்டி பயிற்சிப் பிரிவில் மொத்தம் **16** பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். இவர்களில். **8** நபர்கள் போக்குவரத்து கழகங்களிலிருந்து அயற்பணியில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், திருச்சிராப்பள்ளி பயிற்சிப் பிரிவில் இரண்டு அலுவலர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் (கும்பகோணம்) கழகத்திலிருந்து கடன் / அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

# அத்தியாயம்–15

## தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

**15.1** இத்துறையானது தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுத் துறை வாகனங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது. மேலும், சென்னை மற்றும் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் 20 அரசு தானியங்கி பணிமனைகளையும், அவைகளின் செயல்பாடுகளை முறையாக கண்காணித்து, நடைமுறைப்படுத்த மூன்று மண்டல துணை இயக்குநரகங்களையும் கொண்டு இயங்கி வருகிறது. இம்மாநிலத்திலுள்ள அரசுத் துறை ஊர்திகளுக்கான தரமான பராமரிப்புப் பணிகளை சிக்கனமான செலவில் திறம்பட அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். அனைத்து அரசுத்துறை வாகனங்களின் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகள் தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அரசுத் துறை வாகனங்கள் பிற மாவட்டங்களுக்குச் செல்லும்போது அம்மாவட்டத்தில்

அரசு தானியங்கி பணிமனை இல்லாத நிலையில் அருகில் உள்ள மாவட்டப் பணிமனையில் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளலாம். இதற்கு அதிக தூரம் வாகனங்களை கொண்டு செல்ல வேண்டும். இதனை தவிர்க்கும் பொருட்டு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்ற கூட்டத்தொடரில் **03.07.2018** அன்று "அம்மா அரசு நடமாடும் பணிமனை" முன்னோட்ட அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் ஏற்படுத்த அறிவிக்கப்பட்டது.

**15.2 பயிற்சி:** 2018–2019–ஆம் ஆண்டில் 72 தொழில்நுட்ப பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **பயிற்சி வழங்கிய நிறுவனத்தின் விவரம்** | **காலஅளவு** | **பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | லான்சன் மோட்டார்ஸ் | **17.09.2018** முதல் **22.09.2018** வரை. | **6** |
| 2. | எய்சர் மோட்டார்ஸ் | **11.10.2018** முதல் **12.10.2018** வரை. | 20 |
| 3 | டாடா மோட்டார்ஸ் | **22.10.2018** முதல் **26.10.2018** வரை. | 15 |

| | | | |
|---|---|---|---|
| 4 | எய்சர் மோட்டார்ஸ் | **22.11.2018** முதல் **23.11.2018** வரை. | 19 |
| 5 | போர்ஸ் மோட்டார்ஸ் | **04.12.2018** முதல் **08.12.2018** வரை. | 12 |

**15.3 பணிமனை மற்றும் பராமரிப்பு:** திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சேலத்தில் மண்டல துணை இயக்குநரின் கட்டுப்பாட்டில் மூன்று அரசு தானியங்கி பணிமனைகள் இயங்கி வருகின்றன. பிற சார்நிலை அலுவலகங்கள் கோவை, வேலூர், தருமபுரி, நாகர்கோவில், கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள் தானியங்கி பொறியாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. தூத்துக்குடி, விழுப்புரம் மற்றும் உதகமண்டலம் ஆகிய பணிமனைகள் தொழில்நுட்ப உதவியாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. இத்துறை, மாநிலம் முழுவதும் உள்ள சுமார் **22,687**–க்கும் மேற்பட்ட அரசுத்துறை வாகனங்களை பராமரித்து வருகின்றது. தலைமைச் செயலகத்திலுள்ள வாகனங்களுக்கான சிறுசிறு பழுதுகளை நீக்க சுத்திகரிப்புப் பணிகளை கவனிப்பதற்காக, சென்னையில் தலைமைச் செயலகத்தின் அருகில் சுத்திகரிப்பு பணி நிலையம் ஒன்று

செயல்பட்டு வருகிறது. அரசுத்துறை ஊர்திகளுக்கு எரிபொருள் வழங்குவதற்காக இத்துறையின் பல்வேறு பணிமனைகளில் மொத்தம் 10 எரிபொருள் கிடங்குகள் இயக்கப்பட்டு வருகின்றன. 2016–2017–ஆம் ஆண்டில், மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் சட்டபேரவை அறிவிப்புகளின்படி மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் மதுரை ஆகிய அரசு தானியங்கிப் பணிமனைகளில் ஓட்டுநர்களின் பணித்திறமையை மேம்படுத்தவும் மற்றும் அனைத்து அரசுத் துறைகளில் பணிபுரியும் அனைத்து ஓட்டுநர்களுக்கும் புத்துணர்வு பயிற்சி, அவ்வப்போது அளிக்கும் பொருட்டு புதிய “அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனம்” தொடங்க உத்தேசிக்கப்பட்டது. இதில், 06.08.2018 அன்று ஏற்கனவே சேலத்தில் “அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனம்” தொடங்கப்பட்டது. தற்போது, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.06.2019 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 2018–2019–ம் ஆண்டில் இத்துறையின் மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்ட வாகனங்களின் மொத்த எண்ணிக்கை 24,078.

**15.4 வாகனங்கள் கழிவு செய்தல்:** 2018–2019–ம் ஆண்டில் பயனற்றதென கழிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை.

| ஆண்டு | கனரக மோட்டார் வாகனங்கள் | கார் | ஈப்பு | வேன் | மோட்டார் சைக்கிள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2018–19 | 109 | 169 | 332 | 35 | 416 | 1,061 |

## அத்தியாயம்–16

## துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு

### விமானம் மற்றும் இரயில் போக்குவரத்து

**16.1.** நாளொன்றுக்கு சராசரியாக 1.76 கோடி பயணிகளுக்கு அரசு போக்குவரத்து கழங்களின் மூலம் பேருந்து வசதியினை வழங்குவதில் முக்கிய பங்காற்றும் போக்குவரத்துத் துறை, கூடுதலாக பிற பொது போக்குவரத்து அமைப்புகளான விமானம் மற்றும் இரயில் போக்குவரத்து வளர்ச்சி திட்டங்களை விரைவுபடுத்த தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்துவதன் மூலம் துறை சார்ந்த ஒருங்கிணைப்பில் முன்னிலை வகிக்கின்றது,

**16.2. விமான நிலைய விரிவாக்கத் திட்டங்களுக்கான நில எடுப்பு பணிகள்:** சென்னை விமான நிலையத்தை விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்குவதற்கும் மற்றும் பெருநகர் அல்லாத விமான நிலையங்களான (Non-Metro Airports) மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய விமான நிலையங்களை விரிவாக்கம் செய்வதற்கும் நில எடுப்பு பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வகையில், இத்துறையானது தமிழகத்தில்

தற்போது நடைபெற்று வரும் விமான நிலையங்களின் விரிவாக்கத் திட்டத்திற்கான நில எடுப்பு பணிகளை நில நிர்வாக ஆணையரின் ஒத்துழைப்புடன் செய்து வருகிறது. இத்திட்டங்களுக்கான தேவைப்படும் நிலங்களை விமான நிலையங்கள் ஆணையத்திற்கு எந்தவித வில்லங்கமும் இன்றி இலவசமாக வழங்கப்படுகிறது. நிலஎடுப்புக்கான செலவு தமிழ்நாடு அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நில எடுப்பு பணிகளின் தற்போதைய நிலை |
|---|---|---|
| i. | சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | இத்திட்டத்திற்காக தமிழக அரசு ஏற்கனவே 129.82 ஏக்கர் நிலங்களை இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு வழங்கியுள்ளது. மேலும், 126.25 ஏக்கர் நிலங்களை சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக வழங்க வேண்டியுள்ளது. இதைத்தவிர, 8.50 ஏக்கர் இராணுவ நிலத்தினை இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு மாற்றம் செய்வதற்கான பணிகளும் தனியாக நடைபெற்று வருகின்றன. |
| ii | மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | இத்திட்டத்திற்காக தமிழக அரசு 615.92 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தவும் / நில உரிமை மாற்றம் செய்யவும் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேற்கண்ட நிலங்களில் 466.43 ஏக்கர் பட்டா நிலங்களுக்கான நில எடுப்பு பணிகள் முடிவுற்று 149.49 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களுக்கு நில உரிமை மாற்றம் |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நில எடுப்பு பணிகளின் தற்போதைய நிலை |
|---|---|---|
| | | செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. நில உரிமையாளர்களுக்கு இடைக்கால இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு ரூ.166.69 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மதுரை விமான நிலையம் அருகே மாற்று சுற்றுச்சாலை அமைக்க தேவைப்படும் 160.34 ஏக்கர் நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்வதற்கும் அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. |
| iii. | கோயம்புத்தூர் விமான நிலைய ஓடுபாதை விரிவாக்கத் திட்டம் | இத்திட்டத்திற்காக தமிழக அரசு 490.27 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தவும் / நில உரிமை மாற்றம் செய்யவும் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. 28.37 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களுக்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. முதல்கட்டமாக, நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு ரூ.75.18 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு தேவைப்படும் 134.54 ஏக்கர் இராணுவ நிலங்களை இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு நில மாற்றம் செய்வதற்கு இராணுவ அமைச்சகத்துடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| iv. | திருச்சிராப்பள்ளி விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | இத்திட்டத்திற்காக தமிழக அரசால் 345.63 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தவும் / நில உரிமை மாற்றம் செய்யவும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு தேவைப்படும் 337 ஏக்கர் இராணுவ நிலங்களை இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு நில மாற்றம் |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நில எடுப்பு பணிகளின் தற்போதைய நிலை |
|---|---|---|
| | | செய்வதற்கு இராணுவ அமைச்சகத்துடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| v. | சேலம் விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | இத்திட்டத்திற்காக தமிழக அரசால் 567.42 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தவும் / நில உரிமை மாற்றம் செய்யவும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின் கீழ் சேலம் விமான நிலையம் தேர்வு செய்யப்பட்டு 25.03.2018 முதல் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. |
| vi. | தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | இத்திட்டத்திற்காக தமிழக அரசு 605.77 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தவும் / நில உரிமை மாற்றம் செய்யவும் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேற்கண்ட நிலங்களில் 600.93 ஏக்கர் பட்டா நிலங்களுக்கான நில எடுப்பு பணிகள் முடிவுற்று விமான நிலையங்கள் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 4.66 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களும் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு விரைவில் வழங்கப்படும். நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு ரூ.16.91 கோடி வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி விமான நிலையத்தை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு கூடுதலாக 96.80 ஏக்கர் நிலங்கள் தேவைப்படுவதாக இந்திய விமான நிலையங்கள் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது. இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. |

**16.3 மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டம்:** நடுவண் அரசின் விமான போக்குவரத்து அமைச்சகம், நாட்டில் உள்ள பயன்பாட்டில் இல்லாத மற்றும் குறைந்த பயன்பாட்டில் உள்ள விமான நிலையங்கள் புத்துயிர் பெறும் வகையில், தற்போது இயங்கிவரும் விமான நிலையங்கள் மற்றும் விமான தளங்களுடன் இணைப்பதற்காக மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தினை (உதான்) அறிமுகம் செய்துள்ளது. குறைந்த விலையில் விமான பயணத்தை வழங்கும் இத்திட்டத்தினை ஊக்குவித்து தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டி, தமிழக அரசு நடுவண் அரசின் விமான போக்குவரத்து அமைச்சகத்துடன் **08.06.2017** அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து திட்டத்தின் கீழ் உள்ள விமான நிலையங்களுக்கு தமிழக அரசால் பின்வரும் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

- இத்திட்டத்தின்கீழ் இயங்கும் விமான நிலையங்கள் மற்றும் விமானங்களுக்கு வழங்கப்படும் விமான எரிபொருளுக்கான (Air Turbine Fuel) மதிப்பு கூட்டு வரி ஒரு சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் உள்ள விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு சேவைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

- 20 சதவீத சாத்தியகூறு இடைவெளி நிதி (Viability Gap Fund) தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் மூலம் விமான இயக்கும் நிறுவனத்திற்கு (Airline Operators) வழங்கப்பட்டு வருகிறது.

- உதான் திட்டத்தின்கீழ் செயல்பாட்டிற்கு வரும் ஒவ்வொரு விமான நிலையத்திற்கும் 50% இருக்கைகளேனும் ரூ.2,500/–க்கு விற்பனை செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கு நிபந்தனையுடன் கூடிய உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**16.4 மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள விமான நிலையங்கள்:** தமிழ்நாட்டில் பின்வரும் பயன்பாட்டில் இல்லாத மற்றும் குறைந்த பயன்பாட்டில் உள்ள 13 விமான நிலையங்கள், மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

i. சேலம்

ii. வேலூர்

iii. இராமநாதபுரம்

iv. தஞ்சாவூர்

v. ஓசூர்

vi. நெய்வேலி

vii. தாம்பரம்

viii. அரக்கோணம்

ix. செட்டிநாடு

x. சோழவரம்

xi. கயத்தார்

xii. சூலூர்

xiii. உளுந்தூர்பேட்டை

சேலம், நெய்வேலி மற்றும் ஓசூர் விமான நிலையங்கள் முதற்கட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. சேலம் விமான நிலையத்திலிருந்து **25.03.2018** முதல் விமான சேவை

தொடங்கப்பட்டுள்ளது. நெய்வேலி விமான நிலையத்தில் விமானங்கள் இயக்குவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் தயார் நிலையில் உள்ளன மற்றும் விமான போக்குவரத்து இயக்குநரகத்தின் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின்கீழ் ஒசூர் விமான நிலையத்தை மேம்படுத்தி விமானங்களை இயக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. வேகமாக வளர்ந்து வரும் வேலூர் நகரத்தினை கருத்தில் கொண்டு, மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின் கீழ் வேலூர் விமான நிலையத்தினை மேம்படுத்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. இதேபோன்று, இத்திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் விமான நிலையங்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**16.5 தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்று வரும் இரயில்வே திட்டங்கள்:** தமிழ்நாட்டில் இரயில் சேவைகள் அனைத்தும் தென்னக இரயில்வேயால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் பாலக்காடு இரயில்வே கோட்டத்தின் சில பகுதிகள்

இதில் அடங்கும். இம்மாநிலம் **3,450** கி.மீ அகல இரயில்பாதைகளை கொண்டுள்ளது. இரட்டை இரயில் மற்றும் புதிய இரயில் பாதை அமைத்தல் மற்றும் மின்மயமாக்குதல் போன்றவற்றிற்கும் சரக்கு இரயில் பாதை மற்றும் அதிவிரைவு இரயில் பாதை அமைப்பதற்கும் நிலஎடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தென்னக இரயில்வே துறைக்கு மாநில அரசின் சார்பில், ஒருங்கிணைப்புத் துறையாக போக்குவரத்துத் துறை விளங்குகின்றது. தற்போது புதிய வழித்தடங்கள் மற்றும் பல இரட்டை இரயில் பாதைக்கான பின்வரும் திட்டங்களுக்காக நிலஎடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| i. | மீளவிட்டான் – மேலமருதூர் (மதுரை – தூத்துக்குடி (வழி அருப்புக்கோட்டை) புதிய அகல இரயில் பாதை திட்டம். | • இப்புதிய இரயில் பாதை இப்பகுதியிலுள்ள துறைமுகங்கள் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள புதிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு முக்கிய இணைப்புத்தடமாக இருக்கும்.<br>• தூத்துக்குடி மாவட்டத்தில் **9.61.75** ஹெக்டேர் நிலங்கள் நில எடுப்பு செய்யும் பணிகள் முடிவுற்று இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>• மீதமுள்ள **65.25.09** ஹெக்டேர் நிலஎடுப்பு பணிகள் நடவடிக்கையில் உள்ளன. |

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| ii. | விழுப்புரம் – திண்டுக்கல் இரட்டை அகல இரயில் பாதை மற்றும் மின்மயமாக்கல் திட்டம். | • இத்திட்டம் தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை இணைக்கும் மதிப்புமிக்க திட்டமாகும். இத்திட்டம் அதிக பயணிகளின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்வதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.<br>• இத்திட்டத்திற்காக அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், திண்டுக்கல், கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுள்ள நிலங்களை நிலஎடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நிலஎடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| iii. | ஓமலூர் – மேட்டூர் அணை இரட்டை அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டத்திற்காக சேலம் மாவட்டத்தின் 15 கிராமங்களிலுள்ள 29.20.0 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| iv. | சின்ன சேலம் – கள்ளக்குறிச்சி அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டத்திற்காக விழுப்புரம் மாவட்டத்தின் 11 கிராமங்களிலுள்ள 48.04.00 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| v. | திண்டிவனம் – நகரி புதிய அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டம் திண்டிவனம் மற்றும் நகரி பகுதிகளுக்கிடையே இணைப்பினை சீராக்குகிறது. |

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| | | • இத்திட்டத்திற்காக, திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் வேலூர் ஆகிய 4 மாவட்டங்களில் 682.71.41 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| vi. | திண்டிவனம் – திருவண்ணாமலை புதிய அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டத்தில் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 2 மாவட்டங்கள் கவரப்படுகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் 31.36.04 ஹெக்டேர் நிலங்கள் நிலஎடுப்பு செய்யப்பட்டு இரயில்வே துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 43.26.5 ஹெக்டேர் நிலங்களுக்கான நிலஎடுப்பு பணிகள் நடவடிக்கையில் உள்ளது.<br>• விழுப்புரம் மாவட்டத்தில் 183.44.5 ஹெக்டேர் நிலங்களை நிலஎடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்பு பணிகள் நடவடிக்கையில் உள்ளது. |
| vii. | சென்னை கடற்கரை – கொருக்குபேட்டை மற்றும் கொருக்குபேட்டை – எண்ணூார் இடையே 3வது மற்றும் 4வது இரயில் பாதை அமைக்கும் திட்டம். | • தமிழ்நாட்டில் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் வழியாக இந்த இரயில் பாதை செல்கிறது. இந்த இரயில் பாதை சென்னை கடற்கரை – கும்மிடிப்பூண்டி பிரிவில் புறநகர் போக்குவரத்தை அதிகரிக்க உதவுகிறது. |

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| | | • சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள மூன்று கிராமங்களில் **15890.5** சதுர மீட்டர் நிலங்களை நில எடுப்பு செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிலஎடுப்பு பணிகள் நடவடிக்கையில் உள்ளது. |
| viii. | மதுரை – தூத்துக்குடி இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம். | • இத்திட்டத்திற்காக, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் **89.47.43** ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்யவும் மற்றும் மதுரை மாவட்டத்தில் **177342** சதுர மீட்டர் நிலங்களை நில எடுப்பு செய்யவும் அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| ix. | கன்னியாகுமரி – திருவனந்தபுரம் இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம். | • இத்திட்டத்திற்காக, கன்னியாகுமரி மாவட்டத்தில் **4.37.75** ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| x. | மணியாச்சி – நாகர்கோவில் இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம். | • இத்திட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய **3** மாவட்டங்கள் கவரப்படுகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் **8.32.71** ஹெக்டேர் நிலங்கள் நில எடுப்பு செய்யவும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் **28.24.91** ஹெக்டேர் நிலங்கள் நில எடுப்பு செய்யவும் அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திற்கான நில எடுப்பு பணிக்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. |

## அத்தியாயம்–17

## வருங்கால முயற்சிகள்

**17.1 நிலையான இயக்கக் கொள்கை:** தமிழ்நாட்டில் பல்வகை போக்குவரத்து அமைப்புகள் அதிவேகமாக வளர்ந்து வருகின்றன. விமானம், இரயில் மற்றும் பேருந்து போக்குவரத்து தவிர, தனிநபர்களின் இரு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் போக்குவரத்தை பொறுத்தவரை முக்கிய பங்கு வகிக்கின்றன. வளர்ந்து வரும் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே, போக்குவரத்தைப் பொறுத்தவரை தமிழகம் முழுவதற்கும் ஒரு பரவலான, நிலையான இயக்க கொள்கையை உருவாக்குவது அவசியமாகின்றது. அனைத்து வகையான போக்குவரத்தை உள்ளடக்கிய அனைத்துவகை போக்குவரத்து அமைப்பினை கருத்திற்கொண்டு அனைத்து தரப்பினருக்கும் நன்மை அளிக்கும் வகையில் உருவாக்குவதே இக்கொள்கையின் நோக்கமாகும். இக்கொள்கையானது, மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும், சாலை உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் வாயிலாக நடைப்பயிற்சி, மிதிவண்டி ஓட்டுதல் மற்றும் பொது போக்குவரத்தை ஊக்கப்படுத்தி மக்கள் வாழக்கூடிய சிறந்த சுற்றுச்சூழலை

உருவாக்கவும் வழிவகுக்கும். தமிழ்நாட்டிற்கான நிலையான இயக்கக் கொள்கைக்கான வரைவு தயாரிக்கப்பட்டு, தொடர்புடைய துறைகளின் ஆலோசனை மற்றும் குறிப்புரைக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இறுதி செய்வதற்கு முன்னர் பொதுமக்களுடன் பகிரப்படும்.

**17.2 மின் பேருந்துகள் (FAME India) திட்டம்:** நடுவண் அரசின் கனரக தொழில்துறை அமைச்சகம் ஃபேம் இந்தியா இரண்டாம் திட்டத்திற்கான அறிவிக்கையினை வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, 2019–2022 வரையிலான மூன்றாண்டு காலத்திற்குள், ரூ.10,000 கோடி மதிப்பீட்டிலான மின் வாகனங்களை விரைவாக உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில், 7,090 மின் பேருந்துகளை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு வாங்கிட (Opex Model) ரூ.3545 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்தின் (FAME-II) வாயிலாக, பொது மற்றும் பிற போக்குவரத்தினை மின்மயமாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்திற்கான கருத்துருவினை சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் நடுவண் அரசிற்கு தற்போது அனுப்பியுள்ளது. இதர தகுதியான போக்குவரத்துக்

கழகங்களும் இதற்கான கருத்துருவினை அனுப்பும் பணியினை மேற்கொண்டுள்ளன.

**17.3 பேருந்து தடம் காட்டும் செயலி (LAMB):** திறன்பேசி செயலி மற்றும் புவி திசைக்காட்டி (GPS) தொழில்நுட்ப உதவியுடன் பயணிகள் தகவல் அமைப்பு முறை (passengers information system) அறிமுகம் செய்ய ஆணை வெளியிடப்பட்டது. இவ்வமைப்பு குறிப்பிட்ட பேருந்து நிறுத்தத்தில் குறிப்பிட்ட பேருந்தின் வருகைக்காக காத்திருக்கும் பயணிகளுக்கு அப்பேருந்தின் வருகை நேரத்தினை பற்றிய விவரங்களை வழங்குகிறது. இதனால் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் அதிக பயணிகள் பயணிக்க இவ்வமைப்பு வழி வகுக்கும். மேலும் இந்த திறன்பேசி Locate and Access My Bus (LAMB) செயலியினை (App) வடிவமைத்து இறுதி செய்யும் பணியினை சாலை போக்குவரத்து நிறுவனம் மேற்கொள்ளும்.

**17.4 பொதுப் போக்குவரத்து அமைப்பில் ITS முறையினை மேம்படுத்துதல்:** அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் அன்றாட அலுவலக நடைமுறைகள் அனைத்தும்

ஒரு குடையின் கீழ் இணையதள முறையில் ஒருங்கிணைக்க தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் தலைமையில் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள தகவல் தொழில்நுட்ப திறன் உள்ள அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு குழு அமைக்கப்படும். ஆணையர் / முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அவர்கள் இத்திட்டம் தொடர்பான விரிவான திட்ட அறிக்கையினை தயாரித்து அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.இத்திட்டத்திற்கான மொத்த திட்ட செலவினத்தின் 50% நிதியினை ஒரு முறை நிதியுதவி என்ற அடிப்படையில் (one time assistance) நடுவண் அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகமானது வழங்கும்.

## முடிவுரை

**17.5** போக்குவரத்தை இயக்கும் வகைகளில் (mobility) தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டு வருகிறது என்பது அனைவரும் அறிந்த ஒரு கருத்தாகும். பகிரப்பட்ட, இணைக்கப்பட்ட தன்னாட்சி மற்றும் மின்சார அடிப்படையிலான மற்றும் நவீன போக்குவரத்து மற்றும் மெட்ரோ இரயில் போன்ற அமைப்புகள் வருகை இருந்தபோதிலும், பயணிகளில் பெரும்பான்மையானவர்கள் எதிர்காலத்திலும்கூட பொது போக்குவரத்துக்கு பேருந்துகளை சார்ந்து இருப்பார்கள் என்பதை இத்துறை உணர்ந்திருக்கிறது.

**17.6** முன்னர் குறிப்பிட்டுள்ளவாறு, பொருளாதார முன்னேற்றத்திற்கு சிறந்த போக்குவரத்து இன்றியமையாததாகும். அனைத்து பொருளாதார நடவடிக்கைகள் பேருந்து, இரயில், விமானம் மற்றும் நீர்வழி போக்குவரத்து அல்லது பிற போக்குவரத்துகளை சார்ந்துள்ளன என்பதை இத்துறை முழுமையாக அறிந்திருக்கிறது. மேலும், இத்துறையானது மாணவர்கள், மூத்த குடிமக்களுக்கு இலவச பயணச் சலுகை வழங்குவதோடு பிற நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

**17.7** பொது மக்களின் போக்குவரத்து தேவையினை பூர்த்தி செய்வதை குறிக்கோளாகக் கொண்டு இத்துறை இடைவிடாத உழைப்பினை அளித்துக் கொண்டுள்ளதுடன் சுற்றுசூழலுக்கு ஏற்ற நிலையான பொது போக்குவரத்திற்கு மாற இத்துறை திட்டங்களை தீட்டி தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதை கவனத்தில் கொண்டு ஒரு நிலையான போக்குவரத்து கொள்கை உருவாக்கிட இத்துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளின் எண்ணிக்கைகளை உயர்த்த வேண்டும் என்பதை இவ்வரசு உணர்ந்துள்ளது. அரசின் நிதியுதவியினைத் தவிர, கே.எஃப்.டபிள்யூ திட்டத்தின் (KfW Project) மூலமாக நிதியுதவியை பெற இத்துறை உறுதிப்பூண்டுள்ளது. இதற்கான நடவடிக்கை அடுத்த நிலையினை அடைந்துள்ளது. பணியாளர்களை பொறுத்தமட்டில், ஊழியர்களின் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நியாயமான கோரிக்கைகளை பூர்த்தி செய்யவும் இவ்வரசு உறுதிபூண்டுள்ளது.

**17.8** இறுதியாக, பயணிகளுக்கு அதிக பயனளிக்கும் பொருட்டு பொது போக்குவரத்தினை எளிதாக பயன்படுத்திட இத்துறை முக்கிய பங்காற்றும். மேலும், போக்குவரத்து

சேவையினை தேவைக்கேற்ப சீரமைத்து அரசு போக்குவரத்து கழகங்கள் வழியாக வழங்குவதுடன் ஒட்டு மொத்த போக்குவரத்து துறையில் தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்களுடன் புதிய திட்டங்களை கொண்டு வருவதன் மூலம் இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இத்துறை முக்கிய பங்கினை தொடர்ந்து ஆற்றிக்கொண்டிருக்கும்.

**எம்.ஆர். விஜயபாஸ்கர்**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**

# <u>இணைப்பு</u>

## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2019–2020

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச்செயலகம் | 1,090,21,04 | 145,00,04 | 10 | 1,235,21,18 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 62,61,86 | – | – | 62,61,86 |
| | **மொத்தம்** | **1,152,82,90** | **145,00,04** | **10** | **1,297,83,04** |